கிராம நலம்

(மாதப் பத்திரிகை)

சென்னை அரசாங்க சமுதாய அபிவிருத்தி
இலாகா வெளியீடு

மாடி—1 | ஜூலை, 1956 | படி—10

குறையை நிறைவாக்கும் வழி

"எந்த நாட்டையும்விட, நம் நாட்டில்தான், உணவு உற்பத்தி மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே, நம்முடைய எதிர்காலத் திட்டங்கள் யாவும், உற்பத்தியைப் பெருக்கும் வகையில் தீவிரமாக முன்னேற வேண்டும். அதோடு, கிராமக் கைத்தொழில்கள் வளர்ந்தோங்கவேண்டும். கிராமத்தார், கூட்டுறவு சங்கங்கள் மூலம், கிராமக் கைத்தொழில்களைத் திறம்பட உருவாக்கி வளர்த்துப் பயனடைய வேண்டும்.

மேற்சொன்ன காரியங்களை, கிராமப் பஞ்சாயத்துக்கள், கூட்டுறவு சங்கங்கள், ஆகியவற்றின் மூலம், சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், திறமையான வகையில் நடத்தி வைக்கவேண்டியது அவசியம். பொதுமக்கள், இவற்றில் அக்கறை கொண்டு, அரசாங்க உதவி எதுவுமின்றியே, தொழில் படும் வகையில், சிறந்த முன்னேற்றம் காண வேண்டும்."

பிரதமர் நேருஜி

[நைநிடாலில் நடைபெற்ற ஐந்தாவது அபிவிருத்தி கமிஷனர்களின் மாநாட்டிற்கு அனுப்பிய விசேஷச் செய்தியின் ஒரு பகுதி]

"கிராமங்களின் மறுமலர்ச்சிக்குப் புத்துருவம் அமைப்போம்"

(ஸ்ரீ எம். பக்தவத்ஸலம்)

[சமீபத்தில், மதுரைத் தமிழ்ச் சங்கம், அறுபதாவது நிறைவு விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடியது. அதில் கலந்துகொண்ட விவசாய அமைச்சர் ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கான சிறந்த ஆலோசனைகளை வெளியிட்டார். குறிப்பாக கிராமங்களின் இன்று மலர்ந்து வரும் புத்துணர்ச்சியை விளக்கி, அத் துறையில் இலக்கிய கர்த்தாக்கள் சிறந்த பணிபுரிய நிறைய சந்தர்ப்பம் உண்டென்பதை எடுத்துக்காட்டினார். அவர் செய்த சொற்பொழிவின் ஒரு பகுதியைக் கீழே காணலாம்.

—ஆசிரியர்]

மொழி என்பது மக்களின் வாழ்க்கையோடு மிகவும் நெருங்கிய தொடர்புகொண்டது. எனவே, மக்கள் வாழ்வில் ஏற்படும் வளர்ச்சியோ, வீழ்ச்சியோ அவர்கள் பேசும் மொழியை அதிகமாக பாதிப்பது இயற்கை. எனவே, நம்முடைய நாட்டின் வரலாற்றை யொட்டியே, மொழியின் வரலாறு அமைந்துள்ளதென்று கூறலாம். அரசியல், பொருளாதார சமூக மாறுதல்கள், இலக்கியத்தில் இரண்டறக் கலப்பது, தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாகும். அந்நியர் ஆதிக்கத்தில் நம் நாடு சிக்குண்டிருந்த காலத்தில், சுதந்திரப் போராட்டம் மிகத் தீவிரமாக நடைபெற்றது. மக்கள் உணர்ச்சியை பிரதிபலிக்கும் வகையில் இலக்கிய கர்த்தாக்கள் மக்களின் அபிலாஷைகளுக்கு அழியா உருவம் தீட்டினர். சுதந்திர போராட்டத்திற்கு உயிர் ஊட்டும் கவிதைகள், கட்டுரைகள் முதலியன தமிழ் இலக்கியத்தில் புத்துயிர் பெற்றன. தமிழ் பத்திரிகைகள் தொடங்கப்பெற்று, மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்னைகளை அலசி ஆராயத் தொடங்கின. இவற்றின் விளைவாக, தமிழ் மொழி மக்களின் வாழ்க்கையோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டு ஜீவ சக்தியோடு இயங்கத் தொடங்கியது.

சிக்கல்களைத் தீர்க்கும் பொறுப்பு

நம் நாடு சுதந்திரம் அடைந்தபோது நம் கடமையும், பொறுப்பும் அதிகமாயின. குறைகளுக்கெல்லாம் காரணமானது அந்நியர் அரசாட்சியே என்று கூறுவது, அர்த்தமற்ற பேச்சாகிவிட்டது. ஏனெனில் அவர்களின் பொறுப்பை நம் நாட்டு ஜனப்பிரதிநிதிகள் மேற்கொள்ளத் தொடங்கினர். எனவே, நம் நாட்டின் பொதுப் பிரச்னைகளையும் மக்களின் அபிலாஷைகளையும் தக்கவாறு அறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான வழி முறைகளை நாம் கண்டு பிடித்தாக வேண்டிய அவசியமேற்பட்டுவிட்டது. இதன் விளைவாகத்தான் "நிர்வாக இலக்கியம்" தோன்றி வளரத் தொடங்கியது.

இன்றைய தினம் மக்கள் வாழும் ஒவ்வொரு பகுதியிலும், அரசாங்கம் தலையிட வேண்டிய பொறுப்பேற்பட்டுவிட்டது. அதேபோல், பொது மக்களின் எல்லாத் துறைகளிலும் அரசாங்கத்தின் உதவியையும் ஆலோசனையையும் எதிர்பார்ப்பது இயற்கையாகிவிட்டது. இந்தப் புதிய சூழ்நிலைக்கேற்றபடி, நம்முடைய மொழி எவ்வளவு தூரம் வளம் பெற்று, தக்க வகையில் பயன்பட்டு வருகின்றது என்பதை, பொது மக்கள், அரசாங்கம் ஆகிய இருசாராரும் ஆராயக் கடமைப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் தமிழிலேயே நடைபெற வேண்டும் என்று இன்றைய தினம் பேசப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளில், அரசாங்கம் இத் துறையில் என்னென்ன ஆக்கப் பணிகள் செய்ய முன்வந்திருக்கிறது என்பதை, ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்கவேண்டும். நிர்வாக அமைப்பை திடீர் என்று மாற்றுவதற்குப் பதிலாக, படிப்படியே திருத்திச் செல்வதற்கான சூழ்நிலையை உருவாக்க, அரசாங்கம் முயன்று வந்துள்ளது. தமிழ்க் கலைக் களஞ்சியம் ஒன்று தயாரிக்க நம் நாட்டிலுள்ள எல்லா அறிஞர்களும் ஒன்று கூடி, உழைத்து வருகின்றனர். அரசாங்கம் அதற்கான உதவி தந்துள்ளது. மேலும் ஒவ்வொரு ஜில்லாவிலும் அரசாங்கக் கடிதப் போக்குவரத்துக்கள் தமிழிலேயே நிறைவேற்ற, பரீட்சார்த்தமாக ஒரு திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இத்தகைய ஆரம்ப முயற்சிகளில் எத்தனையோ கஷ்டங்கள் உண்டு. ஆனால், காலப் போக்கில், அறிஞர்கள் ஒத்துழைப்பினாலும், மக்கள் சக்திக்குள்ள லட்சிய வேட்கையினாலும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளினாலும், படிப்படியே சிறந்த பலன் ஏற்பட்டு, இறுதியில் வெற்றி நிச்சயம் கிடைக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

தமிழில் அரசாங்க அறிக்கைகள்

சென்ற இரண்டு ஆண்டுகளில், நம் ராஜ்ய வரவு-செலவு அறிக்கை, சென்னை சட்ட சபையில் சமர்ப்பித்தபோது, தமிழில் வெளியிடப்பட்டதை இச் சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். இது தவிர, ஒரு சில ஜில்லாக்களின் நிர்வாக அறிக்கைகள் தமிழிலேயே வெளியிடப்பட்டுள்ளன. இவற்றை எல்லாம் பலர் கவனித்துப் படிப்பதே இல்லை. இந்த வெளியீடுகளைப் பார்க்காமலே, அரசாங்கத்தைக் குறைகூறிவருவது, ஒரு சிலரின் வழக்கமாகிவிட்டது. தமிழ் மொழி வளர்ச்சிக்கான இத்தகைய முயற்சிகளில், அரசாங்கம் மட்டுமின்றி, தமிழ் அறிஞர்களும், பொதுநலத் தொண்டர்களும் தம்மாலான அளவுக்கு ஒத்துழைத்து, தமிழ் மொழியை வளம்படுத்தவேண்டும். மக்களின் அன்றாட வேலைகளுக்கும், நிர்வாக அலுவல்களுக்கும், தமிழை நல்ல முறையில், எளிய நடையில், பயன்படுத்த, எல்லோரும் முன்வர வேண்டும். எளிமையும், நுட்பமும் கலந்த சொல்லாட்சி, தமிழில் பெருகப் பெருக, அதன் பெருமையும் பயனும் அதிகரிக்கும்.

நம்முடைய கலை இலக்கியங்களுள் சிறந்தவற்றை, பல்வேறு உலக மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளவேண்டும். இதற்காக மத்திய அரசாங்கம் ஒரு திட்டம் வகுத்துள்ளனர். தமிழ் அறிஞர்கள் அதை நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டின் இன்றைய சிறந்த இலக்கிய கர்த்தாக்களின் நூல்களையும் மற்ற மொழியினருக்கு அறிமுகப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமான பணியாகும்.

நம்முடைய நாட்டில் பெரும்பாலோர் கிராமவாசிகள். எனவே, நம் இலக்கியங்கள் கிராமவாசிகளின் வாழ்க்கைக்கு உரமூட்டுவதாகவும், வளமாக்குவதாகவும் அமையவேண்டும். இத் துறையில் இன்றைய தினம், அநேக பத்திரிகைகள் சிறந்த தொண்டாற்றி வருவதை மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். சமுதாய நலத் திட்டங்கள், தேசிய வளர்ச்சித் திட்டங்கள் முதலிய கிராம அபிவிருத்தி வேலைகள் நடைபெறும் வட்டாரங்களில், அநேக நூல் நிலையங்கள், வாசக சாலைகள், மாதர் சங்கங்கள், முதியோர் கல்வி நிலையங்கள், முதலியன ஏற்பட்டு கிராம மக்களின் கல்வி அறிவை பெருக்கி வருகின்றன. எத்தனையோ ஆண்டுகளாக புறக் கணிக்கப்பட்டு வந்த கிராம நல விஷயங்கள் இப்போது முதலிடம் பெற்று வருகின்றன. மக்களிடையே புதிய ஊற்சாகமும் தன்னம்பிக்கையும் உருவாகி வருவதை, அபிவிருத்தி வட்டாரங்களுக்கு நேரில் சென்று பார்த்தால் நன்கு விளங்கும்.

கிராம வளர்ச்சிக்கான இலக்கியம்

மக்களின் புதிய உற்சாகத்தை கிராம அபிவிருத்திக்குப் பயன்படுத்தும்போது, சிறந்த புது இலக்கியங்கள் உருவாவது இயற்கை. புது வகையான பாடல்கள், நாடகங்கள், கதைகள் முதலியன இப்போது தோன்றி வளர்ந்து வருகின்றன. கிராமத் தலைவர்கள், சாரணர்கள், தேசிய இளைஞர் படையினர் முதலியவர்கள் நாட்டின் பல்வேறு கிராமங்களில் முகாம் செய்து, கிராம வாசிகளின் தேவைகளை அறிந்து தொண்டாற்றும் வகையை கற்றறிந்து தேர்ச்சி பெறுகின்றனர். அயல் நாடுகளிலிருந்து விஜயம் செய்யும் பல பிரமுகர்கள் இப்போது நகரங்களைவிட, கிராமங்களுக்குத்தான் அதிகமாகச் சென்று, நம் நாட்டின் முன்னேற்றத்தை அளந்து பார்க்கின்றனர்.

நாட்டில் இன்று நடைபெறும் இந்தப் புது நிகழ்ச்சி களெல்லாம், தமிழ் மொழி வளத்துக்குச் சிறந்த வகையில் வழிகோலுமென்பதில் ஐயமில்லை. நம் தமிழ் அறிஞர்கள், நாட்டின் நடைமுறைகளைப் புறக்கணிப்பது நல்லதல்ல. சிறப்பாக, கிராமங்களில், மக்கள் வளர்ச்சிக்கான இலக்கியங்களை இன்றைய தேவைக்கேற்ப உருவாக்குவதும், அவற்றை எல்லோரும் அறிந்து பயன்படுவதற்கான வழி முறைகளை கண்டுபிடிப்பதும், உடனடியாக செய்யவேண்டிய ஆராய்ச்சியாகும். இந்த முக்கியமான ஆராய்ச்சியில், தமிழ் அறிஞர்கள் தீவிரமாக ஈடுபடுவார்கள் என்று நம்புகிறோம்.

"ரேடியோ" நம் மக்கள் வாழ்வில் இன்று மிக சிறந்த இடம் பெற்றுள்ளது. தமிழ் மொழி வளர்ச்சிக்கு மேலும் சிறந்த முறையில் ஊக்கம் கொடுக்க, வானொலி நிலையத் தார் கடமைப்பட்டிருக்கிறார்கள். கிராம வாழ்வின் மேம் பாட்டுக்கான செய்திகளையும் இலக்கிய நிகழ்ச்சிகளையும் அதிகரிக்கவும், தமிழ் அறிஞர்களின் கூட்டுறவு மூலம், அவற்றின் தரத்தை உயர்த்தவும் அவர்கள் முயல வேண்டும்.

தமிழ்த் தாய்க்குப் புது நகை அணிவோம்

முதல் மூன்று சங்கங்களை வளர்த்த தமிழை, அறுபது ஆண்டுகளுக்கு முன் தோன்றிய மதுரைத் தமிழ் சங்கமும் சிறந்த முறையில் வளம்படுத்தியுள்ளது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த கடைச் சங்கத்தின் இறையனார் உட்பட 49 புலவர்கள் ஒன்றுகூடி தமிழ்ச் செல்வத்தைப் போற்றிப் பாதுகாத்து வளர்த்து, நமக்கு வழங்கியுள்ளனர். நாம் பெற்றுள்ள அந்த இலக்கியச் செல்வத்தைத் தக்கவாறு கற்றறிந்து, இன்றைய மக்கள் வாழ்வுக்கு ஏற்றபடி, அதை மேலும் வளம் படுத்திப் பயனடைய வேண்டியது நம்முடைய கடமை.

கடைச் சங்கம் திகழ்ந்த பொற்றாமரைக் குளமும், மதுரைக் கோயிலும் தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை நமக்கு நினைவூட்டி வருகின்றன. ஆனால், தமிழ்ச் செல்வியை வளர்த்த பாண்டிய மன்னர் இப்போது இல்லை. அதற்குப் பதிலாக, தமிழ் மக்கள் அனைவரும் பாண்டிய மன்னரின் பொறுப்பேற்று, கடமை ஆற்ற வேண்டி யிருக்கிறது. எனவே, நம்முடைய கூட்டு முயற்சியின் விளைவாக, காலத்துக்கேற்ற சிறந்த இலக்கிய அணி கலன்களை உருவாக்கி, தமிழ்த் தாய்க்குச் சூட்டி மகிழ்வோமாக!

G.N.—1A

ஒரே வருஷத்தில் ஐந்து கோடி ரூபாய் மதிப்புள்ள வேலை முன்னேற்றம்

ஸ்தல அபிவிருத்தி வேலையில் மக்களின் தீவிர கவனம்

[ஸ்ரீ N. E. S. ராகவாச்சாரி, .IC.S., Additional Development Commissioner]

[கிராம நல வேலைகள், ஒரு குறிப்பிட்ட பிரதேசங்களில் மட்டும் நடைபெறவில்லை. தேசிய வளர்ச்சித் திட்டம், சமுதாய அபிவிருத்தித் திட்டம் ஆகியவை நடைபெறும் பிரதேசங்களில் மட்டும் இல்லாமல், மக்களின் பொது நல ஆர்வம் எங்கெல்லாம் உருவெடுக்கிறதோ, அங்கெல்லாம் அரசாங்கம் தக்க ஏற்பாடுகள் செய்து, கிராமவாசிகளின் பொதுநலனுக்கான நற்பணிகளுக்கு ஊக்க மூட்டி வருகிறது. "ஸ்தல அபிவிருத்தி வேலைகள்" சம்பந்தமான கொள்கை விளக்கத்தையும், புள்ளி விவரங்களையும் பின்வரும் கட்டுரையில் காணலாம். சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன் மூன்று லட்சம் ரூபாய் நன்கொடை தந்த பொதுஜனங்கள், இவ்வருஷம் 250 லட்சம் (இரண்டரை கோடி) ரூபாய் தர முன்வந்திருக்கிறார்கள் !

—ஆசிரியர்]

கடந்த சுமார் மூன்று வருஷங்களாக நம்முடைய ராஜ்யத்தில், "ஸ்தல அபிவிருத்தி வேலைகள்" (Local Development Works) என்ற பெயரால், கிராம நல வேலைகள் அநேகம் நடந்து வருகின்றன. அதேசமயத்தில், சமுதாய அபிவிருத்தி திட்டமும் சென்ற மூன்று ஆண்டுகளாக, நம் ராஜ்யத்தின் பல்வேறு இடங்களிலே நடைபெற்றுவருவது எல்லோருக்கும் தெரிந்ததே. இந்த இரண்டு திட்டங்களுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என்பதைப் பலரும் சரியாக உணர்வதில்லை. இந்த இரண்டையும் நுட்பமாக ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு, இவற்றுக்கிடையே இருக்கும் நெருங்கிய தொடர்பு, நன்கு விளங்கும்.

திட்டத்தின் வரலாறு

முதன் முதலாக, 1952-ம் ஆண்டில்தான், சமுதாய நலத் திட்டங்கள் ஆரம்பமாயின. இத்திட்டங்களால் சிறந்த நலன்கள் ஏற்படுவதைப் பொதுஜனங்கள் அறிந்து கொண்டனர். அதன் விளைவாக, நாடெங்குமுள்ள ஜனங்கள் தங்கள் தங்கள் ஊர்களையெல்லாம் சமுதாயநலத் திட்டத்தின்கீழ் சேர்க்கவேண்டுமென்று கோரத் தொடங்கினர். ஆனால், அரசாங்கத்திடம், அவ்வளவு நிதி வசதி இல்லை. பெரிய அளவில் சமுதாய நலத் திட்டத்தை விஸ்தரிக்கமுடியாத நிலை ஏற்பட்டது. முதலில் ஏற்படுத்திய சமுதாய நலத்திட்டத்தைப் போன்ற பெரிய அளவுக்கு இல்லாமல், ஓரளவு குறுகிய எல்லைக்குள் "தேசிய வளர்ச்சித் திட்டம்" என்ற பெயரால், கிராம நல வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அதாவது, மூன்று வருஷ காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட செலவு மதிப்பீடு (ஏழரை லட்சம் ரூபாய்) ஏற்படுத்தி, அநேக வட்டாரங்களில் கிராம அபிவிருத்தி வேலை தொடங்கப்பட்டது. அரசாங்கத்திடம் இருக்கும் தொழில்துறை நிபுணர்களின் ஆலோசனையையும், சேவையையும், பொதுமக்களுக்கு உதவுவதே தேசிய வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மூன்றுவது வருட முடிவிற்கு முன்பே, தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரம் சமுதாய அபிவிருத்தி வட்டாரமாக மாற்றப்படும். 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள், நம் இந்திய நாடு முழுவதும் தேசிய வளர்ச்சித்திட்டத்தின்கீழ் வந்துவிடும். அதாவது, இரண்டாவது ஐந்தாண்டு திட்ட கால முடிவிற்குள் தேசிய வளர்ச்சித் திட்டத்தின் நலனை நாட்டு மக்கள் எல்லோரும் அடைவார்கள்.

ஸ்தல அபிவிருத்தி வேலைகளுக்காகத் திட்டம்

படிப்படியே நிறைவேற்றப்படும் இத்திட்டத்தின் காரணமாக, சில பிரதேசங்களில் தேசிய வளர்ச்சித் திட்டம் நடைபெறுவதற்குக் கொஞ்ச காலதாமதம் ஆகலாம். இந்தக் காலதாமதத்தை யாரும் தவிர்க்க முடியாது. ஆனால், கிராம மக்கள் அதுவரையில் பொறுத்துக்கொண்டு இருப்பார்களா ? அவர்களிடையே உருவாகும் உற்சாகமும் கூட்டுறவு சக்தியும், வீணாகக்கூடாதல்லவா ? எனவே, சமுதாய நலத் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம், சமுதாய அபிவிருத்தித் திட்டம், ஆகியவை மேற்கொள்ளப்படாத கிராமப் பிரதேசங்களில், ஓரளவுக்கு கிராம நல வேலைகள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. அதன் விளைவாகத்தான், "ஸ்தல அபிவிருத்தி வேலைகள்" கொண்ட திட்டம் உருவாகியது.

இத்திட்டம், மேலே சொன்னபடி, தீவிர கிராம அபிவிருத்தி வேலைகள் நடைபெறாத பிரதேசங்களில்தான் நடைபெறும். முக்கியமாக, தேசிய வளர்ச்சித் திட்டத்தில் சேராத பிரதேசங்களிலே, மிகவும் அத்தியாவசியமாக

உள்ள வசதிகளைச் செய்து கொடுக்கவே, இத்திட்ட வேலை கள் மேற்கொள்ளப்படும். ஸ்தல அபிவிருத்தி வேலை கள் எல்லாம், உள்ளூர் கிராமத்தாராலேயே நிறைவேற்றப் படும் சிறிய திட்டங்களாகவே இருக்கும். இத்திட்டத்தின் கீழ், அரசாங்கம் கொடுக்கும் அதிகபட்சமான மானியத் தொகை, பத்தாயிரம் ரூபாய்க்கு மேலில்லை. சமுதாய நலத் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம், ஆகியவை அமுல் நடக்கும் இடங்களில் இருப்பதைப் போலவே, பல்வேறு வேலைகளுக்கேற்ப குறிப்பிட்ட விகிதாசாரப்படி, அரசாங்க நன்கொடை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதாவது, மொத் தத்தில் வேலை மதிப்பீட்டின் பாதித்தொகைக்கு மேற் படாமல், அரசாங்க மானியம் கிடைக்கும். ஆயினும், கிராமக் குடிநீர் வினியோக திட்டங்களுக்கு (கிணறு வெட்டி, குழாய் மூலம் குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு) முக்கால் பங்கு செலவுத் தொகை, அரசாங்கம் கொடுக்கத் தயாராயுள்ளது. இந்த ஸ்தல அபிவிருத்தித் திட்டங் களுக்கான வேலைகளுக்கு, அரசாங்க மானியத் தொகை போக, பொதுமக்கள் கொடுக்க வேண்டிய நன்கொடையை, ரொக்கமாகவே செலுத்தவேண்டு மென்பதில்லை. உழைப்பு மூலமாகவோ, வேலைக்குத் தேவையான சாமான் கள் தருவது மூலமாகவோ, கிராமவாசிகள் தங்கள் பங்கைச் செலுத்தலாம். உள்ளூர்ப் பிரதி நிதிக்கே இந்த வேலை கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. உள்ளூரார் எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற்று, அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்ற, இதன் மூலம் நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

மக்கள் அளிக்கும் அமோக ஆதரவு

அரசாங்கம் எதிர் பார்த்ததை விட, மிக அதிகமான அளவுக்கு, பொது மக்களின் ஆதரவு கிடைத்துள்ளது. முதல் வருஷத்தில், அதாவது, 1953-54-ம் ஆண்டில், ஸ்தல அபிவிருத்தி வேலைகளுக்காக அரசாங்கம் அளித்த மானியம், மூன்று லட்ச ரூபாய். அடுத்த வருஷமே (அதாவது, 1954-55-ம் வருடத்தில்) இத்தொகை 59 லட்ச ரூபாயாக அதிகரித்தது. சென்ற ஆண்டு (1955-56-ம் வருடத்தில்) அரசாங்க மானியம் 125 லட்ச ரூபாய். எனவே, ஏறக்குறைய 29 லட்ச ரூபாய் மதிப்பு கொண்ட வேலைகள் 1955-56-ம் வருடத்தில் மட்டும் நடைபெற் றுள்ளன. நடைமுறை வருஷத்தில் (1956-57) அரசாங்க செலவுத் தொகை ரூ. 250 லட்சம்தேவைப்படுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. மொத்தத்தில், 500 லட்சம் ரூபாய் மதிப்புள்ள வேலைகள், மக்கள் நன்கொடையுடன் இவ் வருஷம் நடைபெற்று வருகின்றன என்று கொள்ள லாம்.

இவ்விஷயமாக, இந்திய அரசாங்கத்தின் முடிவான தீர்மானம், இன்னும் வெளிவரவில்லை. நிகழும் வருஷத் துக்குக் குறைந்த தொகைதான் இதற்கென நிர்ணயிக்கப் பட்டுள்ளது. சென்ற வருஷம் மேற்கொள்ளப்பட்ட வேலைகளை முடிப்பதற்குத்தான், இந்தத் தொகை ஓரளவு போதுமானதாக இருக்கிறது. இந்த வருஷ கோரிக்கை களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நிதி வசதி கிடைக்கு மென்று நம்பப்படுகிறது.

காலப் போக்கில், தேசிய வளர்ச்சித்திட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை பெருகப் பெருக, ஸ்தல அபிவிருத்தித் திட்டத்திற்காகும் செலவு, படிப்படியே குறைந்து வர வேண்டியது இயற்கையே என்பதை நாம் மறத்தலாகாது.

அம்பர் சர்க்காத் திட்டம்

1956–57-ல் இடைக்கால அம்பர் சர்க்காத் திட்டமொன் றுக்கு இந்திய சர்க்கார் சுமார் ரூ. 70 லட்சம் அனுமதித் துள்ளனர்.

மொத்தம் 10,000 அம்பர் சர்க்காக்கள் தயாரிப்பதற்கு இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது. கள பரிசோ தனை வேலைகளுக்காக அம்பர் சர்க்கா முன்னேற்றத் திட்டத்தின்கீழ் இவ் வருஷ ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட 15 வித்யாலயங்கள் (பயிற்சி நிலையங்கள்), நூறு பரிசிரமா லயங்கள் (உற்பத்தி—பயிற்சி நிலையங்கள்), ஆறு காரியா லயங்கள் ஆகியவைகளும் தொடர்ந்து செயல் புரிந்து வரும். ஒரு வருஷ காலத்துக்கு மேலும் நூறு உற்பத்தி—பயிற்சி நிலையங்கள் திறக்கப்படும்.

இத்திட்டம் சர்வ சேவா சங்க ஸ்தாபனத்தின் மூலமாக வோ அல்லது இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்படுகிற பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனம் ஏதாவதொன்றின் மூலமாகவோ, அகில இந்திய கதர்—கிராமக் கைத்தொழில்கள் போர்டால் நிறைவேற்றிவைக்கப்படும். பதினைந்து பயிற்சி நிலை யங்களில், 750 அம்பர் சர்க்கா போதகர்கள் ஆறு மாத காலம் பயிற்சி பெறுவார்கள். பயிற்சியின்போது ஒவ் வொருவருக்கும் மாதத்துக்கு அறுபது ரூபாய் உதவிச் சம்பளம் வழங்கப்படும். அதே சமயத்தில் சர்க்காத் தயா ரிப்புக்கான மூன்று மாத காலப் பயிற்சி வகுப்பில் 200 தச்சர்கள் பயிற்சி பெறுவார்கள். ஒவ்வொரு தச்சு வேலைப் பயிற்சியாளருக்கும் மாதம் 75 ரூபாய் உதவிச் சம்பளம் கொடுக்கப்படும். இவ்வாறாக ஒரு வருஷ காலத்தில் மொத்தம் 1,500 போதகர்களும் 800 தச்சு வேலைக் காரர்களும் பயிற்சி பெறுவார்கள்.

உற்பத்தி—பயிற்சிக்கான மொத்த 200 நிலையங்களில், ஒவ்வொன்றிலும் 300 பேருக்கு இரண்டு மாத காலத்துக் குப் பயிற்சியளிக்கப்படும்; அதற்குப் பிறகு, அவர்கள் உற்பத்தி வேலையில் ஈடுபடுவார்கள். மேற்படிப் பயிற்சியின் போது ஒவ்வொரு ஊழியருக்கும் மாதம் ரூ. 20 உதவிச் சம்பளம் கிடைக்கும்.

இது சம்பந்தமாக இயங்கி வருகிற ஆறு காரியாலயங்கள் அஹமதாபாத்திலுள்ள மத்திய இணைப்புக் காரியாலயம், பில்லிமோராவில் உள்ள தயாரிப்பு நிலையம், ஹூப்ளியி லுள்ள நூல் வினியோகக் காரியாலயம், நாஸிக்கிலுள்ள பயிற்சி நிலையம், வார்தாவிலுள்ள சர்க்கா வினியோகக் காரியாலயம், உற்பத்தி நிலையங்களின் இன்ஸ்பெக்டர் காரி யாலயம் ஆகியவையாகும்.

G.N.—2

மகரிஷியின் பாராட்டும், எதிர்காலத் திட்டமும்

[ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி, கூட்டு அபிவிருத்திக் கமிஷனர்]

அன்புள்ள கிராம சேவக்குகளுக்கு,

நலம். எனது முன்னைய கடிதங்களில் கிராம சேவக்குகளின் லட்சியம் எதுவாயிருக்கவேண்டுமென்பதையும், அந்த லட்சியத்தை நோக்கி வேலை செய்வதற்கு விநோபாஜியின் தமிழ் நாடு பூதான யாத்திரை ஒரு புதிய சந்தர்ப்பத்தை உண்டு பண்ணியிருக்கிறதென்பதையும், இந்த அரிய சந்தர்ப்பத்தை கிராம சேவக்குகள் நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்பதையும், குறிப்பிட்டிருந்தேன்.

கிராம சேவையாளருடன் விநோபாஜி உரையாடல்

மே மாத மத்தியில் செங்கல்பட்டு ஜில்லாவிற்கு எழுந்தருளிய விநோபாஜி, ஜூன் மாதம் முடிய இந்த ஜில்லாவிலேயே இருக்கும்படியான பாக்கியம் செங்கல்பட்டு ஜில்லாவாசிகளுக்குக் கிட்டியது. இந்த ஜில்லாவில் நடைபெறும் சமுதாய அபிவிருத்தி திட்ட சம்பந்தமான வேலை விவரங்களை விநோபாஜி நேரிடையாக அறிந்துகொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது,நம்மனைவரின் பாக்கியமேயாகும். சமுதாய நலத் திட்டத்தின் வேலைகளில் திருப்தி காட்டிய விநோபாஜி, இத்திட்டத்தின் ஊழியர்கள் தன்னைத் தனியாகக் கண்டு தரிசிக்கவும் நடைபெற்று வரும் வேலை விவரங்களைப்பற்றி விவாதிக்கவும் தனது சம்மதத்தைத் தெரிவித்தார். கிராம சேவக்குகளுக்கும் வட்டார அபிவிருத்தி இலாகாவைச் சேர்ந்த மற்ற ஊழியர்களுக்கும் விநோபாஜியைத் தரிசித்ததும் தனியாகக் கண்டு பேசியதும் மட்டற்ற மகிழ்ச்சியூட்டுவதாயிருந்தன.

சர்வோதய சமுதாய நிர்மாண சம்பந்தமான விஷயங்களில் தங்களுக்கிருந்த சந்தேகங்களை விநோபாஜியிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள கிராம சேவக்குகள் ஆர்வங் கொண்டிருந்ததையும் ஊழியர்கள் எல்லோரும் வழக்கமாகக் கதர் அணிபவர்களாயிருந்ததுவும் கதர் அபிருத்தி வேலைகளுக்குரிய நல்ல பயிற்சி பெற்றிருந்ததுவும் விநோபாஜிக்கு மகிழ்ச்சியூட்டுவதாயிருந்தது. சமுதாய அபிவிருத்தித் திட்ட ஊழியர்கள் பூமிதான இயக்கத்திற்கு நல்ல உதவியும் ஒத்துழைப்பும் தந்து வருகிறார்கள் என்ற விவரத்தை தமிழ் நாடு பூதான இயக்கத்தின் செயலாளர் ஸ்ரீ ஜெகந்நாதன் அவர்கள் விநோபாஜியிடம் தெரிவித்த செய்தி தினசரிப் பத்திரிகைகளில் வெளி வந்தது. சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லா சமுதாய அபிவிருத்தித் திட்ட ஊழியர்களுக்கும் மட்டற்ற மகிழ்ச்சி தந்திருக்கும்.

அமைச்சரின் உறுதி மொழி

விநோபாஜி தமிழ் நாட்டுக்கு வந்து இரண்டு தினங்களிலேயே சமுதாய அபிவிருத்தித் திட்ட ஊழியர்களுக்கும் பூமிதான இயக்க ஊழியர்களுக்கும் உள்ள நல்ல உறவைத் தெரிந்துகொண்டார். ஆதலின், இன்னும் இதைவிடச் சிறந்த வேலை செய்யும் வழி முறைகளைப்பற்றி சமுதாய அபிவிருத்தி வேலைகளைக் கவனித்து வரும் அமைச்சர் ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்களுடன் விநோபாஜி கலந்து பேசினார். சமுதாய நலத் திட்ட ஊழியர்கள் எல்லா வகையிலும் பூதான இயக்கத்திற்கு உதவ சித்தமாயிருப்பதாக அமைச்சர் அவர்கள் விநோபாஜியிடம் தெரிவித்தார்கள். கிராம அபிவிருத்தி வேலைகளுக்கும், பூதான இயக்க வளர்ச்சிக்கும், இதன் மூலம் தீவிர முன்னேற்றம் ஏற்படுவது நிச்சயம்.

முக்கிய எச்சரிக்கை

அமைச்சர் அவர்கள் விநோபாஜியைச் சந்தித்த அன்றே, எனக்கும் அம்மகரிஷியைத் தரிசித்துப் பேசும் பாக்கியம் கிடைத்தது. அது சமயம், முதலமைச்சர் அவர்களும் உடனிருந்தது, எனக்கு மிகுந்த மகிழ்ச்சி தருவதாயிருந்தது. கிராம சேவக்குகள் இது சமயம் செய்துவரும் வேலைகளைப் பாராட்டிப் பேசிய விநோபாஜி, மேலும் சொன்னதாவது "கிராம சேவக்குகள் நிலதானம் பெறுவதிலும் பெற்ற நிலங்களை விநியோகிப்பதிலும் பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும்." இந்தப் பொறுப்பு கிராம சேவக்குகளின் சக்திக்கு மிஞ்சியதோ என்ற ஐயம் அப்போது எனக்குத் தோன்றியது. ஆனால் உடனிருந்த முதலமைச்சர் அவர்கள், "கிராம சேவக்குகள் விநோபாஜி விரும்பும் இந்த நில விநியோக வேலையை, அவர்களுடைய மற்ற வேலைகளுக்குப் பாதகமேற்படாமலும், கிராமவாசிகளின் அதிருப்திக்கு ஆளாகிவிடாமல் கவனத்தோடு சாமர்த்தியமாகவும், செய்யவேண்டியதிருக்கும்" என்றார்.

காந்தியடிகளின் பிரதம சீடரும் சர்வோதய சமுதாய அமைப்பிற்கு அடிகோலிவருபவருமான மகரிஷி விநோபாஜியும், நமது பேரன்பிற்கும் பெரு மதிப்பிற்குமுரிய முதல் அமைச்சர் அவர்களும் சேர்ந்து, "கிராம சேவக்குகள் பூமிதான யக்ஞத்தில் கிடைக்கும் நிலங்களைப் பிரித்துக்கொடுக்கும் வேலையைக் கவனிக்கலாம்" என்று சொல்லும்பொழுது; இதை எப்படிச் செய்வது, அதற்கான வழி முறைகள் என்ன என்று யோசிப்பதைத் தவிர, வேறு விதமாக எங்ஙனம் நான் எண்ண முடியும்?

பூமிதானக் கொள்கை விவரங்களை அறிவீர்!

மாபெரும் வேள்வியான பூமிதான இயக்கத்தில் பங்கு கொள்ள விரும்பும் கிராம சேவக்குகளும் கிராம நலத் திட்டத்தைச் சேர்ந்த மற்ற ஊழியர்களும் பூமிதான யக்ஞத்தின் நோக்கம் என்ன? சர்வோதயம் என்றால் என்ன? வினோபாஜி அவர்களுடைய வாழ்க்கை வரலாறு, அவர் பேசியும் எழுதியும் வரும் விஷயங்களின் சாராம்சம் முதலியவற்றை நன்கு தெரிந்துகொள்வது அவசியம். இது சம்பந்தமான பிரசுரங்கள், நூல்கள், பத்திரிகைகள் இவற்றை நன்கு படித்தறியவேண்டியது இன்றியமையாதது. இந்த விவரங்களை அறிய விரும்புவோர், சர்வோதயப் பிரசுரங்களை வெளியிடுவதையே வாழ்க்கையின் லட்சியமாகக்கொண்டு வேலை செய்துவரும் அன்பர் ஸ்ரீ என். ராமசாமி (சர்வோதயப் பிரசுராலயம்—தஞ்சாவூர்) அவர்களுக்கு எழுதி, விவரம் அறிந்துகொள்வார்களாக!

காஞ்சிபுரம் சர்வோதய மகாநாடு சம்பந்தமாக '' கிராம நல'த்தில் இந்த இதழில் வெளி வந்துள்ள கருத்து நிறைந்த செய்திகளை, கிராம சேவக்குகள் கவனித்துப் படித்து, வினோபாஜியின் அரிய கருத்துக்களின் பொருள்களை நன்கு தெரிந்து, அவற்றைத் தங்களுடையதாக்கிக்கொள்ள வேண்டுமென்பது எனது விருப்பம்.

மாயூரம் (கிழக்கு) வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956-ம் ௵ மே ௴-த்தில், நான்கு பெரிய பாலங்களைக் கட்ட திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. இப்பாலங்களைக் கட்ட, கிராம மக்கள், மே ௴-த்தில் மட்டும், மொத்தம் ரூ. 15,950 தங்கள் பங்காக அளித்திருக்கிறார்கள். வடகரையில் கிராம மருந்தகம் ஒன்று கட்ட திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

சீர்காழி வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலுள்ள குன்னம்கிராமத்தில்,1956-ம் ௵ மே ௴-த்தில், இரு நடைபாதை பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. கீழையூர், திருவெண்காடு, திருநகரி கிராமங்களுக்கு, ரேடியோ செட்டுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திருமங்கலம் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956-ம் ௵ மே ௴-த்தில், பயிர் பாதுகாப்பு நிரூபண முறைகள் பல இடங்களில் நடத்தப்பட்டன. 250 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. திருமங்கலத்திலும், மற்றும் நான்கு ஊர்களிலும், சிறுவர் விளையாட்டு விழாக்கள் நடைபெற்றன. 52 சர்க்காக்கள் விநியோகிக்கப்பட்டன. சுமார் ரூ. 390 பெறுமான கதர் துணி விற்கப்பட்டது.

ஆத்தூர் வட்டாரத்தில்

மதுரை ஜில்லாவிலுள்ள ஆத்தூர் வட்டாரத்திலே, 1956-ம் ௵ மே ௴-த்தில், 2,688 கால்நடைப் பிராணிகளுக்கு வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டது. மூன்று முதியோர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அறிவிப்பு

"கிராம நலம்" பத்திரிகையின் விளம்பர விகிதம்

வெளி அட்டைப் பக்கம்	..	ரூ. 150- 0- 0
உள் அட்டைப் பக்கம்	..	ரூ. 125- 0- 0

இதர பக்கங்களில்:

பக்கம் ஒன்றுக்கு	.. ..	ரூ. 100- 0- 0
அரைப் பக்கம்	.. ..	ரூ. 60- 0- 0

சந்தா விவரம்

வருட சந்தா	.. .. ..	ரூ. 1- 8- 0
ஆறு மாத சந்தா	.. ..	ரூ. 0-12- 0

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பலாம்.

தனிப் பிரதி—இரண்டு அணா

தனிப் பிரதிகளை அனுப்ப, தபால் பில்லைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

மற்ற விவரங்களுக்கு, பின்வரும் விலாசத்துக்கு எழுதுங்கள்:

பொதுஜனத் தொடர்பு அதிகாரி,
(சமுதாய அபிவிருத்தி),
செக்ரடேரியட்,
சென்னை-9.

Public Relations Officer,
(Community Development),
Public (R.D.P.) Dept.,
Secretariat,
Madras-9.

இப் பத்திரிகை, சென்னை அரசாங்க, சமுதாய அபிவிருத்தி இலாகாவால் நடத்தப்படுகிறது. ஆயினும், இதில் வெளியிடப்படும் அபிப்பிராயங்களும், காணப்படும் கருத்துக்களும், சென்னை அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான அபிப்பிராயங்களை வெளியிடுகின்றன என்பதில்லை.

இப் பத்திரிகையில் வெளியிடும் பாட்டு, கதை, நாடகம் முதலியவற்றில் வரும் பெயர்கள் யாவையும் கற்பனையே. ஒருவரையும் குறிப்பிடுவன அல்ல.

கலந்து பேசுவோம் :

கூட்டுறவு இயக்கம் உருப்படுமா ?

உழவின் பெருமையை வானமளாவ எடுத்துக் கூறுகிறார்கள். இதைப்பற்றி எத்தனையோ கவிதைகள், காவியங்கள், கட்டுரைகள், உலக மொழிகளிலெல்லாம் வெளி வந்துள்ளன. ஆனால் நம் நாட்டு உழவரின் வாழ்வு என்றும் கவலைக்கிடமானதாகவே அமைந்துள்ளது. " உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது " என்ற பழமொழி நம் நாட்டு விவசாயியின் பொருளாதார நிலையை இரத்தினச் சுருக்கமாக வெளியிடுகிறது.

கடன் பளுவென்பது, உழவர்களின் பரம்பரைச் சொத்தாகிவிட்டது. வருஷ முழுவதும் விவசாயத்தை நம்பி வாழும் உழைப்பாளிப் பெரு மக்கள், கடன் பெருக்கத்தையே பரிசாகப் பெறவேண்டி நேரிடுகிறது. இந்த நிலைமை எத்தனை நாள் நீடிக்குமோ என்பது ஒருவருக்கும் தெரியாமலிருந்தது.

கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பு

இத்தகைய நிலையில், கூட்டுறவு இயக்கம், கிராம மக்களுக்கு ஒரு பெரிய வரப் பிரசாதமாகக் கிடைத்தது. குறைந்த வட்டியில் தேவைக்கான பணத்தைப்பெற்று நியாயமான தவணைகள் மூலம் கடனைத் திருப்பிக்கொடுத்து, நாணயத்தையும் ஒற்றுமை மனப்பான்மையையும் வளர்க்கும் திட்டத்தை இந்தப் புதிய இயக்கம் ஜனங்களிடையே பரப்பியது. சிறப்பாக, நம் சென்னை ராஜ்யத்தில் கடந்த சுமார் ஐம்பது ஆண்டுகளில் கூட்டுறவு இயக்கம், கடன் கொடுப்பதோடு மட்டுமின்றி, இன்னும் பல துறைகளிலும் தீவிரமாக முன்னேறியுள்ளது.

இந்த முன்னேற்றம், மற்ற ராஜ்யங்களோடு ஒத்திட்டுப் பார்த்தால், பெருமைப்படத்தக்கதுதான். ஆயினும், சமீபத்தில் வெளியான சில புள்ளி விவரங்களை வைத்து ஆராய்ந்தால், நாம் செய்யவேண்டியுள்ளது, இன்னும் எவ்வளவோ இருப்பதும் நன்கு விளங்கும். கூட்டுறவு சங்கங்கள் மூலம், நம் நாட்டு உழவர்களின் பிரச்னையை எவ்வளவு தூரம் தீர்த்திருக்கிறோம் என்பதைப் பின்வரும் அறிக்கை விவரம் வெளிப்படுத்தும். அதாவது நூற்றுக்கு 3·1 விகிதம்தான் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் வசதி அளிக்கப்படுகிறது. இதிலும் அதிக நிலமுள்ள விவசாயிகளுக்குத்தான் பெரும்பகுதியான கடன் வசதி கிடைக்கிறது. மிகக்குறைந்த அளவுக்குத்தான் சிறிய விவசாயிகளுக்கு கிடைக்கிறது. அரசாங்கம் கொடுக்கும் உதவியோ, 3·3 சதவிகிதமாகும். அதாவது, அரசாங்கத்தின் பல்வேறு இலாகாக்கள் கொடுக்கும் கடன் உதவி ஆயிரத்தில் முப்பத்து மூன்று பேருக்கு (நூற்றில் 3.3) கிடைக்கிறது.

கிராமக்கடன் வசதிபற்றி ஆராய்ச்சி

இந்த விவரங்கள் மிக விரிவான ஆராய்ச்சியின் முடிவாகக் கிடைத்துள்ளன. 1951-ம் ஆண்டு ஆகஸ்ட்டில் ஓர் ஆராய்ச்சி ஸ்தாபனத்தை அகில இந்திய ரீதியில், கிராமக்கடன் வசதிகளை ஆராய்ந்தறிய, நம் நாட்டின் ரிசர்வு பாங்க் ஏற்பாடு செய்தது. ஸ்ரீ ஏ. டி. கோர்வாலா என்பவர் அதன் தலைவராகவும், டாக்டர் என். எஸ். ஆர். சாஸ்திரி அதன் காரியதரிசியாகவும் இருந்தனர். அவர்களுடன் பேராசிரியர் ஸ்ரீ டி. ஆர். காட்கில், ஸ்ரீ பி. வெங்கட்டப்பையா ஆகியோர் அங்கத்தினர்களாயிருந்தனர். இக்கமிட்டியினர் மேற்கொண்ட ஆராய்ச்சி, மிக விரிவாகவும், விஞ்ஞான ரீதியிலும்திறம்பட நடத்தப்பட்டது. அகில இந்தியாவிலும் பரந்து கிடக்கும் பல்வேறு பிரதேசங்களில் விசாரணையும் ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்பட்டன. சுமார் 75 ஜில்லாக்களைச் சேர்ந்த 600 கிராமங்களில் வாழும் 127,343 குடும்பங்களைப் பற்றிய எல்லா விவரங்களும் விசாரித்தறிந்து தொகுக்கப்பட்டன. வியாபாரம் நடைபெறும் நகரங்கள், அரசாங்க நிர்வாகத்தின் தலைமைப் பீடங்கள், ஆகிய பிரதேசங்களும் இந்த ஆராய்ச்சியில் இடம் பெற்றன. கிராமவாசிகளின் கடன் பிரச்னைகள், அவற்றோடு சம்பந்தப்பட்ட பொருளாதாரச் சிக்கல்கள் முதலியன, இது வரையில் என்றுமே நடைபெறாத வகையில், மிகவும் நுணுக்கமாக ஆராயப்பட்டன. இவை தவிர, அதிகாரிகள், அதிகாரப் பற்றற்ற பொதுஜனப் பிரதிநிதிகள் ஆகியோரின் கருத்துக்களும், விசாரித்து அறியப்பட்டன.

இவ்வளவு சிறந்த முறையில், புகழ்பெற்ற பொருளாதார நிபுணர்களின் மேற்பார்வையின்கீழ், பல ஆண்டுகளாக நடைபெற்ற தீவிர ஆராய்ச்சியின் விளைவாக, நாட்டின் முன்னிலையில் வைக்கப்பட்டுள்ள விவரங்கள் எல்லோருடைய சிந்தனைக்கும் உரியன. கிராமவாசிகளின் பொருளாதார மேம்பாட்டைப்பற்றிப் பேசுவோரும், உழைப்போரும், திட்டமிடுவோரும், நிறைவேற்றுவோரும், மிகக் கடினமான இந்தப் பிரச்னையை எப்படியும் தீர்த்தாக வேண்டும்.

கூட்டுறவு வளர்ச்சிக்காக விசேஷ கமிட்டி

கூட்டுறவு சங்கங்களின் அங்கத்தினராவோர் பெரும் பாலும் கடன் வாங்கும் நோக்கத்தோடு உள்ளனர். இப்போதுள்ள நிலையில் மிகக் குறைந்த குடும்பங்களே கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்துள்ளன. நம் நாட்டிலுள்ள எல்லா குடும்பங்களும் கூட்டுறவு சங்கங்களில் கட்டாயம் சேர்ந்தாகவேண்டுமென்றும், கிராம வாசிகளுக்கு கடன் உதவியோடு மற்ற எல்லா வசதிகளும் ஏற்படச் செய்ய வேண்டியது அவசியமென்றும், முடிவாகிவிட்டது. திட்டக் கமிஷன் தலைவர் நேருஜி அவர்களும், உப தலைவர் ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களும் இதை அடிக்கடி வற்புறுத்தி வருகின்றனர். சமீபத்தில் சென்னை அரசாங்கம் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கென விசேஷ கமிட்டி ஒன்றை நியமித்தனர். அனுபவம் நிறைந்த அறிஞர்கள்கொண்ட அந்தக் கமிட்டி, அநேக ஆலோசனைகளைச் சமர்ப்பித்துள்ளது. அரசாங்கத்தார் அவற்றை ஆராய்ந்து வருகின்றனர்.

சமுதாய நலத்திட்டமும் கூட்டுறவு வளர்ச்சியும்

இந்த நிலையில் கூட்டுறவு சங்கங்களின் எதிர் காலத்தைப் பற்றியும், நடைமுறை விவரங்களைப்பற்றியும், தங்கள் தங்கள் கிராம நிலைமைகளைப்பற்றியும், பொது மக்கள் கவனம் செலுத்தவேண்டியது அவசியம். இந்த விஷயத்தைக் குறித்து விரிவான ஆராய்ச்சியை நடத்த 'கிராம நலம்' வாய்ப்பு அளிக்கும். கூட்டுறவு சங்கங்களைப்பற்றிய பொதுப் பிரச்னைகளையும் ஆலோசனைகளையும், அனுபவ பூர்வமாக சுருங்கிய முறையில் எழுதப்படும் கடிதங்கள், கட்டுரைகள், 'கிராம நலத்தில்' வெளியிடப்படும். அவற்றில் சிறந்தவையாகக் கருதப்படுகின்றவற்றிற்கு விசேஷ பரிசளிக்கவும் முடிவாகியுள்ளது. தனிப்பட்ட மனிதர்களைப் பற்றியபுகார்கள், விருப்புவெறுப்புகள், ஆகியவற்றுக்கு இடமளிக்காமல், பொதுப் பிரச்னைகளை மட்டும் தக்க அத்தாட்சிகளோடு எடுத்துக்காட்ட வேண்டுகிறோம். சிறப்பாக நாடெங்கும் நடைபெற்றுவரும் கிராம அபிவிருத்தித் திட்டத்தை, கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு இன்னும் சிறந்த முறையில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை எடுத்துரைக்கவேண்டுகிறோம்.

கி. வேங்கடசாமி, ஆசிரியர்.

கல்லுப்பட்டி வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956-ம் ௵ மே ௴-த்தில் 12 ஏக்கர் தரிசு நிலம் சாகுபடிக்காக பண்படுத்தப்பட்டது. 430 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. 127 நோயுற்ற பிராணிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பழைய கிணறு ஒன்று புதுப்பிக்கப்பட்டது. 300 கெஜ நீளத்துக்கு சாக்கடைக்கால் அமைக்கும் வேலை பூர்த்தி செய்யப்பட்டது. சமூகக் கல்வி நிலையமொன்றும், மூன்று இளைஞர் மன்றங்களும் ஆரம்பிக்கப்பட்டன. நான்கு பர்லாங் தூரத்துக்கு சாதாரண பாதை அமைக்கப்பட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்ட சாதனைகள்

1951-லிருந்து 1956-ம் ஆண்டு வரையில் உள்ள ஐந்து வருஷ காலத்தில், தேசிய வருமானம் சுமார் 18 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

உணவுத் தானிய உற்பத்தி 20 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

பருத்தி உற்பத்தியும், பிரதான எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியும் முறையே 45 சதவிகிதமும், 8 சதவிகிதமும் உயர்ந்துள்ளன.

பெரிய பாசனத் திட்டங்களின் மூலம், புதிதாக மொத்தம் சுமார் 60 லட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கப்பட்டிருக்கிறது.

சிறிய பாசனத் திட்டங்களின் மூலம், வேறு 100 லட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைத்துள்ளது.

தொழில்துறை உற்பத்திக் குறியீட்டெண்ணும் படிப்படியாக உயர்ந்து வந்திருக்கிறது. 1950-ம் ஆண்டில் அது 105 ஆகவும், 1951-ல் 117 ஆகவும் இருந்தது. 1955-ம் ஆண்டுக்கான இடைக்கால தொழில்துறைக் குறியீட்டெண் (1946-ம் ஆண்டு நிலவரத்தை அடிப்படை எண் 100 ஆகக்கொண்டு கணக்கிடப்பட்டது) 161 ஆக உயர்ந்துள்ளது.

மின்சார உற்பத்தியளவு, 1950–51-ம் ஆண்டில் 65,750 லட்சம் கிலோவாட் மணியாக இருந்தது, 1955–56-ம் ஆண்டில் 110,000 லட்சம் கிலோவாட் மணியாக உயர்ந்துவிட்டது.

சிமிட்டி உற்பத்தி, 1950–51-ம் ஆண்டில் 27 லட்சம் டன்னாக இருந்தது, 1955–56-ம் ஆண்டில் 43 லட்சம் டன்னாக உயர்ந்துவிட்டது.

சர்க்கார் துறையில், பல்வேறு பிரதான தொழில்துறை அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்தியாகியுள்ளன; தனியார் துறையில், உற்பத்திச் சரக்குகள், மூலதனச் சரக்குகள் ஆகியவை விஷயத்தில் விசேஷமாக புதிதாகப் பெருமளவுக்கு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதிதாக மூன்று உருக்குத் தொழிற்சாலைகளையும் கனரக மின்சார உற்பத்தி சாதனத்தையும் அமைப்பது விஷயமாக, பூர்வாங்க வேலைகள் முடிந்து விட்டன. இரண்டாவது திட்டகாலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் பெரும் வேலைகளுக்கு அஸ்திவாரம் கோலியாகிவிட்டது.

சென்னையில் விவசாய விவாத அரங்கு

[ஸ்ரீ எஸ். வி. துரைசாமி முதலியார், பி. ஏ., எல். டி., B.D.O., திருவண்ணாமலை]

சென்னையிலுள்ள இராஜாஜி மண்டபத்தில் 1956-ம் ஆண்டு மேமீ 15, 16, தேதிகளில் ஒரு விவசாய விவாத அரங்கு (செமினர்) நடந்தது. அது போது செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் இருந்து சமுதாய நலத்திட்டம் தேசிய வளர்ச்சித்திட்ட வட்டாரங்களில் வேலை செய்யும் சமுதாய வளர்ச்சித் திட்ட அலுவலர்களும், அவர்களுக்கு உதவியாய் வேலை செய்து வரும், விவசாய கால்நடை அதிகாரிகளும் கிராமத் திருப்பணியாளர்களும் கிராம சேவக்குகளும், இராஜ்ய விவசாய அதிகாரிகளும் ஒருங்கே கூடினார்கள்.

முதல் நாள் அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் அவர்கள் விவாத அரங்கைத் திறந்துவைத்துப் பேசுகையில் விவசாய உற்பத்தியைப் பெருக்குவது, பொதுவாக எல்லாப் பிரதேசங்களிலும், குறிப்பாக சமுதாய வளர்ச்சிப் பிரதேசங்களிலும் மிக எளிதாக இருக்கவேண்டும் என்றும், இந்த இலட்சியத்தை அடைவதற்கு உபாயங்களும் சாதனங்களும் தேடுவதோடு அப் பிரதேசங்களில் வேலை செய்யும் ஜில்லா அதிகாரிகள் தனிப்பட்ட பொறுப்பும், முழு அக்கரையும் கொள்ளவேண்டுமென்றும் வற்புறுத்தினர். அதோடு சமுதாய நலத்திட்டப் பிரதேசங்களில் வேலை செய்து வரும் அதிகாரிகளும் ஜில்லா அதிகாரிகளும் ஒரு மனப்பட்டு ஒரே முகமாக இந்த லட்சியத்தை அடைந்தே தீர பணியாற்றிவர வேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினர். சில பொதுப் பிரச்னைகளை விவாதித்து, ஒருமனப்பட்டு வழி வகைகளைக் கவனிக்கவேண்டியே, அத்தகைய விவாத அரங்கு ஏற்படுத்தியிருப்பதின் நோக்கம் எனவும் தெரிவித்தார். இன்னும் எல்லா அதிகாரிகளுக்கும், உழைப்பில் உயர்வு, ஒன்றுபட்ட மனப்பான்மை, மக்கள் சேவை அதிகாரிகளுக்குள் கட்டுபாடு, அவர்களுடைய விசேஷ பொறுப்பு, இன்னபிற கருத்துக்களை தெரிவித்து, தம் தம் வேலையில் கண்ணுங் கருத்துமாகப் பாடுபடவேண்டுமென்று அவர் வற்புறுத்தினர்.

பின்னர் ஸ்ரீ ஜி. வேங்கடாசலபதி அவர்கள் (கூட்டு அபிவிருத்தி கமிஷனர்) பேசுகையில் சமுதாய நலத்திட்ட தேசிய வளர்ச்சித்திட்ட வட்டாரங்களில் கிணறு வெட்டல், பள்ளிக்கூடம் கட்டுதல், சாலைகள் அமைத்தல், வாசகசாலைகள் கட்டுதல் இன்னும் பிற வேலைகள் செவ்வனே நடந்தேறிய போதிலும் மிகமிக முக்கியமான விவசாய அபிவிருத்தி வகையில் பிரத்தியேகமாக அபிவிருத்தி அதிகாரிகள் இருந்தும் அரசாங்கமும் மக்களும் எதிர்பார்த்த அளவு அபிவிருத்தி காணாதது துரதிர்ஷ்ட வசம் எனக் கூறினர். எனவே ஜில்லா அதிகாரிகள் அப் பிரதேசங்களை எக் காரணத்தினாலும் புறக்கணிக்கக்கூடாது என்று அவர் திட்ட வட்டமாகக் கூறினர். விவசாய அபிவிருத்தி ஒன்றினைச் செய்தால், மக்களே மற்ற வசதிகளைத் தேடிக் கொள்ள ஒருவாறு முடியுமென்று அழுத்தம் திருத்தமாகவும் அவர் கூறினர்.

விவாத அரங்கு நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பல்வேறு பிரச்னைகளைப்பற்றி யோசிக்கப்பட்டது.

முதற்கண் மக்கள் கூட்டுறவு பெறவும், அவர்களோடு கலந்து யோசித்து இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவு உற்பத்தியினைப் பெருக்கவும், சிற்சில குக் கிராமங்களிலும் அதிக உற்பத்தியைக் காண வழி வகைகள் கண்டு பிடிக்கவும், இன்னும், பருத்தி, கரும்பு, எண்ணெய் வித்துக்கள் பயிரிடக்கூடிய பிரதேசங்களில் அதிக உற்பத்தி செய்யவும், அதிகாரிகள் மக்களோடு திட்டம் போட்டு எவ்வாற்றாலும் 40 சதவீதம் உணவு உற்பத்தியினைப்பெருக்கவும் முடிவு செய்யப்பட்டது.

40 சதவீதம் உணவு உற்பத்தியைப் பெருக்க சில முக்கிய சாதனங்களைப்பற்றியும், அவைகளை அடைய வழி வகைகளும் யோசிக்கப்பட்டன.

ஒவ்வொரு அதிகாரியின் பொறுப்பு இவ்வளவென்றும் இத்தகையது என்றும், இன்ன வகையில் மக்களுக்கு உதவி செய்வதில் அதிகாரிகள் கடமைப்பட்டிருக்கிறார்கள் எனவும் விவாத அரங்கில் பேசப்பட்டு பின்னர் முடிவு கூறப்பட்டது.

40 சத வீத உணவு உற்பத்திப் பெருக்கத்தின் இலட்சியத்தை அடையும் வரை ஒவ்வொருவரும் தம்தம் பொறுப்பினை உணர்வதோடு தம் தம் கடமைகளைச் செவ்வனே ஆற்றவும் முடிவு செய்யப்பட்டது.

பயிர்களையும், ஏனைய மரம் செடி வகைகளை அப்போதைக்கப்போது பார்த்து மேலவர்களுக்குத் தெரிவிக்க மேஸ்திரிகள் எல்லாப் பிரதேசங்களிலும் உள்ளனர். பயிர்த்தொழில் செய்வதில் காலத்தையும் உத்தேசித்து விதைகள், உரங்கள், கருவிகள், மக்களுக்கு உதவி செய்ய வேண்டிய காலத்தில் அவசியம் உதவி செய்வதில் ஒரு சிறிதும் தாமதிக்கக்கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது.

மக்களுக்கு விவசாயத் துறையில் போதிய கல்வி பெற பல சாதனங்கள் உண்டு. விவசாய சம்பந்தப்பட்ட சினிமா படம் காட்ட ஏற்பாடு செய்யவும், இன்ன வகைகளில் அரசாங்கம் உதவி செய்ய முன் வந்திருக்கிறதென்றும் சொல்வது கிராமசேவக்குகளின் கடமை என்றும் கூறப்பட்டது.

காலம், மண் வளம், தகுந்த உரம், நீர் வசதி இன்ன பிற தன்மைகளை அறிந்து நன்மைகள் புரிய ஜில்லா விவசாய அதிகாரிகள் இருப்பதாகவும் அரங்கில் தெரிவிக்கப் பட்டது.

விவாத அரங்கில் மற்றொரு முக்கிய விஷயத்தைப்பற்றியும் யோசித்து விவாதித்து முடிவு செய்யப்பட்டது. பருத்தி உற்பத்தியைப் பெருக்கவேண்டுவதும் மிக முக்கியமெனத் தெரிவிக்கப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் நான்கு இலட்சம் பேல் பஞ்சு உற்பத்தி செய்யவேண்டியதின் அவசியத்தைப்பற்றியும் தெளிவாக்கப்பட்டது. பஞ்சு உற்பத்தியின் பெருக்கத்தை உண்டாக்கும் பொருட்டு வழிவகைகள் உருவாக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன. எல்லாப் பிரதேசங்களிலும் எல்லா அதிகாரிகளும் முழுப் பொறுப்பு கொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

முசிறி வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே 1956-ம் ஆண்டு மே மாதத்தில் 30 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. 120 ஏக்கர் நிலத்தில் திருந்திய ஜப்பானிய சாகுபடி முறை பின்பற்றப் பட்டது. 19½ டன் அம்மோனியம் சல்பேட்டும் 250 பவுண்டு சீரக சம்பா P 216F பருத்தி விதையும், 30 பவுண்டு விதையும் விநியோகிக்கப்பட்டன. ஜம்புமடையில் மகப்பேறு நிலையமொன்று கட்டி முடிக்கப்பட்டது. அத்துடன் நான்கு பள்ளிக்கட்டிடங்களும் கட்டி முடிக்கப்பட்டன. மூன்று மக்கள் மனமகிழ் மன்றங்கள், ஒரு நூல் நிலையம், இரு இளைஞர் மன்றங்கள் ஆகியவை அமைக்கப்பட்டன.

பாபநாசம் (வடக்கு) வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு மே மாதத்தில் 32 குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டன. செயற்கைக் கருத்தரிப்பு முறை மூலம் 22 கால்நடைப் பிராணிகள் சினைப் படுத்தப்பட்டன. ஆரம்ப சுகாதார நிலையத்தின் மூலம், 290 பேர்களுக்கு வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டது. வலத்தூரிலும் கணபதி அக்ரஹாரத்திலும் சிறுவர் பூங்காக்கள் திறக்கப்பட்டன. கிராம வீடு கட்டும் திட்டத்தின்படி 12 புதிய வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

வேதாரணியம் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு மே மாதத்தில் வெட்டியக்காடு என்ற குக் கிராமத்தில் குழாய் கிணறு ஒன்றும், தனிகோட்டகம் கிராமத்தில் ஒன்பது குழாய் கிணறுகளும் அமைக்கப்பட்டன. 5,208 பவுண்டு கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. 27 இரும்புக் கலப்பைகள் விநியோகிக்கப் பட்டன. சமூகக் கல்வி நிலையம் ஒன்றும், மக்கள் மனமகிழ் மன்றங்கள் இரண்டும், சிறுவர் பூங்கா ஒன்றும், இளைஞர் மன்றம் ஒன்றும் அமைக்கப்பட்டன.

கிராமங்களுக்கொரு பொற்காலம்

[ஸ்ரீமதி ராஜம் சீதாராமன்]

இந்த வருஷம் போல் எந்த வருஷமும்
இத்துணை நன்று யிருந்ததில்லை—வரும்
அந்த வருஷம் இதைவிட மேலாய்
அனந்தம் நலந்தர வேண்டுமென்றே

இந்திய சர்க்கார் எடுக்கும் முயற்சிகள்
எண்ணிலடங்காது பெண்ணரசே
சொந்தமா யெல்லாரும் சேர்ந்துழைத்தால் [நாடு
சொர்க்க மென்றுகுமே மாதரசே

ஊருக்கொரு தபால் ஆபீசுண்டு கடன்
உதவி செய்திட பாங்கி யுண்டு
சேரிகளின் சுகாதாரங் கவனித்து
சேவை செய்யும் பணியாளருண்டு

பள்ளிகள் வைத்திய சாலைகள் ஊர்தோறும்
பாடிடும் வானொலி கூடுமம்மா
பள்ளங்கள் மேடுகள் செப்பனிட்டு நல்ல
பாதை யமையுது பாருமம்மா

கரும்பொடு செந்நெல் பயறு வகைகள்
கணக்குக் கதிகமாய்க் கண்டிடவே
விரும்பிய விதம் விளைச்சல் செய்ய உயர்
வித்துக்கள் பண்ணையும் தோன்றுதடி

தானியங்களை யழிக்கின்ற நோய்க்கு
தடுப்பு மருந்துகள் தந்திடுவார்
மாநில மக்கள் பசிதீர்க்கும் பயிர்
வளரப் புதுமுறை வகுத்திடுவார்

தேசீய திட்டத்தில் கிராமங்களுக்கு
சிறந்த பொற்காலமும் வந்ததம்மா
ஆசிய கண்டத்தில் பாரத நாடே
அரும் பணி தன்னில் முன்னணதம்மா.

தன்கடன் என்று பணிசெய்யும் மக்களும்
தன்னலம் விட்ட தனிகர்களும்
அன்புடன் கிராம நலங்கருதி தம்மை
அர்ப்பணம் செய்திட வேண்டுமம்மா.

சமுதாய நலத்திட்ட வட்டாரங்களில் பனை வெல்ல உற்பத்தி

சமுதாய நலத் திட்டம் அமலாக ஆரம்பித்ததும், கிராமங்களில் புது எழுச்சி தோன்றியிருக்கிறது. ஒன்றாகச் சேர்ந்து முயற்சிப்பதன் மூலம், பல வசதிகள் பெறமுடியுமென்பதை கிராம மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

இந்த ராஜ்யத்திலுள்ள சமுதாய நலத்திட்ட வட்டாரங்களிலே, 247 வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. நவீன முறையில் பனை வெல்ல உற்பத்தித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காகவும், வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்க அங்கத்தினர்களாகவுள்ள மாஜி கள்ளிறக்குவோர்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்காகவும், மாஜி கள்ளிறக்குவோர்களுக்கு, பனை வெல்ல உற்பத்திக்குரிய நவீன சாதனங்களை இலவசமாக வழங்க, அரசினர் அனுமதி அளித்திருக்கிறார்கள்.

கீழ் பவானி சமுதாய அபிவிருத்திப் பிரதேசத்தில், இம்மாதிரிப்பட்ட நவீன சாதனங்கள், 20 அங்கத்தினர்களுக்கு ஒரு செட்டு வீதம், 197 செட்டுகள், தேர்ந்தெடுக்கப்பட்ட வெல்ல உற்பத்தி சங்கங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டிருக்கின்றன. இச் செட்டுகளை விநியோகிப்பதற்காகவும், வெல்ல உற்பத்தியில் சீர்திருந்திய முறைகளைக் கையாள, கூட்டுறவு சங்க அங்கத்தினர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும், பனை வெல்ல உற்பத்தி போதகர் ஒருவர் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர், இது வரை, 170 செயற் காட்சிகளை நடத்தியிருப்பதுடன், 181 "கிபயார்" உலைகளைக் கட்டியிருக்கிறார். இதே மாதிரி, மலம்புழாத் திட்டப் பிரதேசத்தில், 20 அங்கத்தினர்களுக்கு ஒரு செட்டு வீதம், வெல்ல உற்பத்தி கூட்டுறவு அங்கத்தினர்களுக்கு 502 வெல்ல உற்பத்தி சாதன செட்டுகள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரதேசத்தில் நியமிக்கப்பட்டிருக்கும் பனை வெல்ல உற்பத்தி போதகர், இச் செட்டுகளின் விநியோகத்தைக் கவனித்துவருகிறார். சீர்திருந்திய வெல்ல உற்பத்தி முறையைப் பிரபலப்படுத்த, 100 செயற் காட்சிகளை இவர் நடத்தியிருப்பதுடன், 502 'கிபாயர்' உலைகளைக் கட்டியிருக்கிறார்.

பனை வெல்லத்திலிருந்து வெள்ளைச் சர்க்கரையைத் தயாரிக்க, மேலும் சில சாதனங்களை, இவ்விரு வட்டாரங்களிலுள்ளசில கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. பல்லஸாறு வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கம் மூலமாக வெள்ளைச் சர்க்கரையைத் தயாரிப்பதற்காக, அரசினர் 9,942 ரூபாய் உதவித்தொகையாகவும், 29,490 ரூபாய் கடனாகவும் வழங்கியிருக்கிறார்கள். ஆனால், மின்சார வசதியில்லாததன் காரணமாக, அச்சங்கம், வெள்ளைச் சர்க்கரை உற்பத்தியை இன்னும் ஆரம்பிக்கவில்லை. ஆகவே, மின்சார விசையின்றி இயங்கக் கூடிய யந்திர சாதனங்களை அமைத்து வெள்ளைச் சர்க்கரையைத் தயாரிக்க ஏற்பாடாகி வருகிறது.

சீர்திருந்திய வெல்ல உற்பத்தி சாதன செட்டுகள், கீழ்க்கண்டுள்ள சமுதாய நலத்திட்ட வட்டாரங்களிலிருக்கும் வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்க அங்கத்தினர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப் பட்டிருக்கின்றன.

வட்டாரம்.	ஜில்லா.	இலவசமாக விநியோகிக்கப் பட்ட செட்டுகளின் எண்ணிக்கை.
சேரன் மகாதேவி ..	திருநெல்வேலி ..	51
சிதம்பரம் ..	தென் ஆற்காடு ..	2
திருக்கழுக்குன்றம் ..	செங்கற்பட்டு ..	4
சின்ன சேலம் ..	தென் ஆற்காடு ..	3
வளத்தி ..	டிை	8
திருத்துறைப்பூண்டி ..	தஞ்சாவூர் ..	37
ஸ்ரீ வில்லிபுத்தூர், ராஜபாளையம், சிவகாசி.	ராமநாதபுரம் ..	31

இவை தவிர, பாதி விலைக்கு, சுமார் 32 செட்டுகள், திருநெல்வேலி, தென் ஆற்காடு ஜில்லாக்களிலிருக்கும் சமுதாய நலத்திட்ட வட்டாரங்களிலுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

சென்னை விவசாயிகளின் அகில இந்திய சுற்றுப்பிரயாணம்

சென்னையிலிருந்து புறப்பட விருக்கும் சுற்றுப்பிரயாண கோஷ்டியில் சேர்வதற்கு, அநேக விவசாயிகள், வட்டார அபிவிருத்தி அதிகாரிகள் மூலம், தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளார்கள். அவர்கள், "பிரயாணம் எப்போது ஆரம்பமாகும்?" என்று கேட்கிறார்கள். பிரயாணம் ஆரம்பமாகும் தேதி பற்றிய விவரங்கள் பின்னர் கிராம நலத்தில் அறிவிக்கப்படும். இச் சுற்றுப்பிரயாணத்தைப் பற்றிய விவரங்கள், இந்த இதழில் "செய்தித் திரட்டு" தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

'தான' த்திலே வளரும் கிராமம்

......சிரம தானம்



......ஞான தானம்



......வைத்திய தானம்......



......மின்சார தானம்......

......உத்தியோக தானம்......

......' யாத்திரை ' தானம......

ஐந்தாண்டுத் திட்டம்

ஸ்ரீ என். ராகவன்

சமுதாய நலத்திட்டம்

சமுதாய நலத்திட்டத்தினால்

சகல வசதியும் பெருகுதய்யா (சமு)
அமைதி ஆனந்தம் நிலவுதய்யா
ஆரோக்கியமும் வளருதய்யா
விமரிசையாகக் கிராமமெல்லாம்
விருத்தியடைந்து மகிழுதய்யா (சமு)

அடிப்படை கல்வி முதியோர் கல்வி
ஆதாரப்பள்ளியும் முன்னேறி
குடிதண்ணீரும் குளிப்பறையும்
குழாயும் மின்சார வசதியுமாய் (சமு)

மருத்துவ நிலைய வைத்தியமும்
மாதர் நல சங்கங்களும்
அருங்கலை கைத்தொழில் வாசகசாலை
ஆடல் பாடல் அரங்கமெல்லாம் (சமு)

நெய்வேலிச் சுரங்கம்

புதையல் கிடைக்குது—நமக்குப்
புதையல் கிடைக்குது
பொருளாதார நிலை உயர்த்தப்
பூமிக்குள் ஐம்பூதம் காத்தப் (புதை)

விதவிதமாப் பொருளும் உண்டு
வேலை கிடைக்க வசதி கண்டு
அதிகப்பயன் கிடைக்குமென்று
ஆராய்ச்சிகள் நடந்ததினால் (புதை)

நெய்வேலிச் சுரங்கத்திலே
நிலக்கரிப் புதையல் கிடைக்குதய்யா
தெய்வந்தந்த பொக்கிஷத்தால்
தென்னாடு வளம் கொழிக்குதைய்யா (புதை)

நூறு சதுரமைல் பரப்பிலுள்ள
நிலக்கரி இருபது கோடி டன்னை
வாரி எடுக்க எழுபது கோடி
வழங்கத் திட்டம் வகுத்ததினால் (புதை)

வீட்டுக்கெரிபொருள் இதுவாகும்
மேலும் பெட்ரோல் உருவாகும்
நாட்டுக்கு அமோனியம் சல்பேட் உரம்
நாளும் தடையின்றிக் கொடுத்தாகும் (புதை)

பெரம்பூர் தொழிற்சாலை

பெட்டிகள் வருது—ரயில்
பெட்டிகள் வருது
பெரம்பூருத் தொழிற்சாலையிலிருந்து (பெட்)

கட்டிய புதுப்புதுப் பெட்டிகளெல்லாம்
கடகடவென்று ரயிலுப்பாதையில்
எட்டுத் திசையும் ஜனங்களை ஏற்றி
இடைவிடாமலே பவனி செல்லவே (பெட்)

சென்னை ராஜ்யத் தொழிலாளிகளின்
திறமைகளெல்லாம் தேசமே காண
மின்னல் வேகத்தில் கண்ணைக் கவர்ந்து
மெச்சிப்புகழும் விமரிசையுடனே (பெட்)

பிரயாணிகள் வசதிகளெல்லாம்
குறைவில்லாமலே நிரம்பியே இருக்கும்
தரத்தில் உயர்ந்த பெட்டிகளாகத்
தாய்நாட்டிலேயே தயாராகிய (பெட்)

தோட்டக்கலை

தோட்டத் தொழிலில் நாட்டம்
செலுத்துங்க—அந்த நல்ல
தொழிலைக் கலையாய்ப் பேணி வளருங்க—ஊரெங்கும் (தோ)

நாட்டு வளம் அதிலிருக்குது—நவ இந்திய
நாகரிகம் அதிலிருக்குது
போட்டியிட்டுக் படிக்க வாருங்க—பயிற்சி பெற்றுப்
புது டில்லியில் பட்டம் வாங்குக—மாணவர்கள் (தோ)

கனிவகையைப் பெருக்குவதற்கும்—தோட்டப் பயிர்
காணிகளைப் பெருக்குவதற்கும்
இனிதான திட்டமிருக்குது—ஐந்தாண்டு
இரண்டாவது திட்டப் பகுதியில் (தோ)

பத்திரமாய்ப் பழைய தோட்டத்தை—செப்பனிட்டுப்
பாதுகாத்து விருத்தி செய்யவும்
புத்தம் புதிய தோட்டம் போடவும்—நமது சர்க்கார்
பொருளுதவி, கடன் வழங்குறார்—ஆகையினால் (தோ)

காயும் கனியும்

காய் கனிகள் பயிருபண்ணணும்—உணவில்
கட்டாயமாய்க் கலந்து உண்ணணும்-செழிக்கச் செழிக்
கக் (காய்) நோய் நொடியை எதிர்த்து வாழவும்—உடல்
தேயாமல் வளர்ச்சியடையவும்
ஆயுளெல்லாம் ஆனந்தமாகும்—நீண்ட
ஆரோக்கிய வாழ்வு பெறவும் நல்ல நல்ல (காய்)

பத்தவுன்ஸுக் காய்கறிகளும்—இ ரிய
பழவகைகள் மூணு அவுன்ஸும்
சத்துணவைச் சரிக்கட்டிட—தினம்
சாப்பாட்டில் கலந்திருக்கவே—தாராளமாய்க் (காய்)

கணக்கெடுத்துப் பார்த்தோமானல்—உண்ணும்
காய் கனிகள் பத்தாக் குறைவே
குணங்குறையைக் கண்டறிந்து—நிவர்த்தி செஞ்சு
கூட்டுறவாய் முன்னேறிடவே—அன்றுடம் (காய்)

பூச்சிகளை ஒழிச்சுக் கட்டணும்—சிறந்த
பொறுக்கு விதை தேர்ந்தெடுக்கணும்
நாத்துகளைப் பேணிக்காக்கவும்—நவீனமாய்
நல்ல முறையைக் கடைப்பிடித்து நாம்—புத்தம்புதுக் (காய்)

பக்குவமாய்ப் பதம் செய்யவும்—காய் கனியைப்
பலநாட்குச் சேமித்திடவும்
சர்க்கரையும் யந்திரங்களும்—வரிச்
சலுகைகளும் கிடைப்பதினுலே—தவருமல் (காய்)

தோட்டத்திலும் பயிருபண்ணலாம்—மரத்
தொட்டியிலும் பயிரு பண்ணலாம்
நாட்டில் பயிர் ஆகி வருகிற—நிலப்பரப்பை
நாலுபத்தாய் அதிகரிக்கணும்—ஆகையினுல் (காய்)

கோடிக்குமேல் செலவு செய்யவே—சர்க்கார்
கொண்டுள்ள திட்டமிருப்பதால்
பாடுபட முன் வரவேணும்—காய்கனிப்
பயிர் வகைகள் முன்னேற வேணும்—அதை உணர்ந்து (காய்)

மாயூரம் (மேற்கு) வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலுள்ள சேட்டூர் கிராமத்தில் 1956-ம் வருடம் மே மாதத்தில் சிறுவர் பூங்கா ஒன்று திறக்கப்பட்டது. சமூகக் கல்வி நிதியிலிருந்து கலுக்கனி முட்டத்திலுள்ள சமூக சேவை சங்கத்திற்காக நாற்பது ரூபாயும் மாயூரம் கால்நடைக் கண்காட்சிக்காக 250 ரூபாயும், கோனேரி ராஜ புறத்திலுள்ள சமூக சேவை சங்கத்திற்காக சுமார் முப்பது ரூபாயும், நூல் நிலையங்களுக்கு வேண்டிய புத்தகங்களை வாங்க இருநூறு ரூபாயும், பட்டவர்த்தியிலுள்ள சிறுவர் பூங்காவுக்காக 430 ரூபாயும், சோழம்பேட்டையிலுள்ள சிறுவர் பூங்காவுக்காக 430 ரூபாயும். ரேடியோ செட்டுக்காக 175 ரூபாயும் செலவு செய்யப்பட்டது.

வில்லுப்பாட்டு

ஐந்தாண்டுத் திட்டங்கள், சமுதாய அபிவிருத்தித் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம் முதலியவை பற்றிச் சிறந்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தக்கூடிய வில்லுப்பாட்டுக் கோஷ்டியினருக்குத் தகுந்த சன்மானம் வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இத் திட்டங்களைப்பற்றி சுமார் ஒன்றரை மணி முதல் இரண்டு மணி நேரம் வரை வில்லுப்பாட்டுப் பாடி, இடையிடையே விரிவுரைகள் செய்யக்கூடிய வில்லுப்பாட்டுக் கோஷ்டியினர், தங்களைப்பற்றிய முழு விவரங்களை, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுப்புமாறு கோரப்படுகிறார்கள்.

எழுத்தாளர்களுக்கு

பிறர் எழுதிய கதைகளையும் நாடகங்களையும், கட்டுரைகளையும் தழுவாமலும் மொழிபெயர்க்காமலும், சொந்த கற்பனையாகவோ அல்லது அநுபவத்தை யொட்டியோ, எழுதயனுப்பப்படும் சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள், நாட்டுப் பாடல்கள், விவசாயம் பற்றிய கட்டுரைகள் முதலியவை வரவேற்கப்படுகின்றன. அவைகளில் சிறந்தவற்றிற்கு, ஒவ்வொரு மாதமும் கீழ்க் கண்டவாறு சன்மானம வழங்கப்படும்.

சிறு கதை—(" கிராம நலத்தில் " பிரசுரிக்கப் பட்டால், இது 5 பக்கங்களுக்குட்பட்டு இருக்கவேண்டும்)—ரூ. 25.

ஓரங்க நாடகம்—(" கிராம நலத்தில்" பிரசுரிக் கப்பட்டால் இது 6 பக்கங்களுக்குள் அடங்க வேண்டும்)—ரூ. 25.

நாட்டுப் பாடல்கள்—(" கிராம நலத்தில் " பிரசுரிக்கப்பட்டால், இவை ஒரு பக்கத்துக் குள் அடங்கவேண்டும.)—ரூ. 10.

விவசாயம் பற்றிய கட்டுரைகள்—(இவை, " கிராம நலத்தில் " பிரசுரிக்கப்பட்டால், இரண்டு பக்கங்களுக்குள் அடங்க வேண்டும்.)—ரூ. 10.

முக்கிய குறிப்பு.—சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள், நாட்டுப் பாடல்கள், முதலியவை ஐந்தாண்டுத் திட்டங்கள், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுவதுடன், விவசாயம பற்றிய கட்டுரைகளோ, சமுதாய நலத்திட்ட வட்டாரங் களில் தமக்கு ஏற்பட்டுள்ள அநுபவங்களை யொட்டி எழுதப்பட்டனவாக இருத்தல்வேண்டும். சிறந்த கதைகளுக்கும், நாடகங்களுக்கும், நாட்டுப் பாடல்களுக்கும் கட்டுரைகளுக்கும் சன்மான மளிப்பதுபற்றி ஆசிரியர் செய்யும் முடிவே இறுதி யானது. " கிராமநலத்தில் " பிரசுரிக்கப்படாத கதைகள், கட்டுரைகள் முதலியவற்றை எழுத் தாளர்களுக்கு திருப்பி அனுப்புவது சாத்திய மல்ல. அரசாங்க உத்தியோக சார்புள்ளவர் களும், பிரபல எழுத்தாளர்களும், இப் பரிசுப் போட்டியில் கலந்துகொள்ளலாம்.

ஆசிரியர்,
" கிராம நலம் "
சென்னை 9.

G,N.—4A

நம்பமுடியவில்லை; ஆனால் நடைபெறுகிறது

[பஞ்சாயத்து நிர்வாகத்தைப்பற்றிய கருத்துகளைப் பரிமாறிக்கொள்வதற்காக, ஒரு விவாத மேடையை, இம்மாதம் முதல் உருவாக்கியுள்ளோம். முதலாவதாக, விவாதத்திற்கான ஒருசில கருத்துக்களை பின்வரும் கட்டுரையில் கொடுத்திருக்கிறோம். இந்த விஷயத்தை ஆராயும் முறையில் பலரும் தொடர்ந்து எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். சிறந்த விவாதக் கட்டுரைகளுக்கு, தக்க பரிசுகள் வழங்கப்படும். சிறப்பாக, நம் ராஜ்ய பஞ்சாயத்து நிர்வாகம் எத்தகைய முறையில் நடைபெற்றால், கிராம அபிவிருத்தி வேலைகள் துரிதமாக முன்னேறும் என்பதைப்பற்றி, பல்வேறு சாராரின் கருத்துக்களை வரவேற்கிறோம்.

—ஆசிரியர்]

நம் நாட்டுக் கிராமங்கள் மிகவும் பிற்போக்காயிருப்பதற்கான முக்கிய காரணம், கட்சிச் சண்டைகளே என்று கூறப்படுகிறது. கட்சிகளில்லாத கிராமத்தைப் பார்க்கவே முடியாது. ஒரு சிலரின் அபிப்பிராயபேதம் காரணமாக அநேக கட்சிகளும் அதன் விளைவாக, மனத்தாங்கல்களும், விபரீத நிகழ்ச்சிகளும், கிராமங்களில் நிகழ்ந்த வண்ண மிருக்கின்றன. இந்த நிலைமை மாறினால் தவிர கிராமத்தில் பொதுநலப் பணிகளோ, பொருளாதார வாழ்வோ, முன்னேற முடியாது என்று பலரும் கூறி வருவதைப் பார்க்கிறோம்.

சிக்கல்களைத் தீர்ப்பதற்கு பண்பட்ட அனுபவம்

கட்சிகளே இல்லாத கிராமத்தை எவ்வாறு சிருஷ்டிப்பது ? இந்தக் கேள்விக்கு விடையளிப்பது எளிதல்ல. கடலில் அலை எப்போது ஓயும் என்று கேள்வி கேட்டுக் கொண்டு, அதன் கரையிலேயே நின்றுகொண்டு ஆராய்ச்சி புரியும் புத்திசாலியின் நினைவு வருகிறது. அலையற்ற கடலை எதிர்பார்த்திருப்பதற்கும், கட்சிகளற்ற கிராமத்தை எதிர்நோக்கி இருப்பதற்கும், அதிக வித்தியாசமிருக்க முடியாது.

ஒரு சிறு குடும்பத்துக்குள்ளேயே எத்தனையோ அபிப்பிராய பேதங்கள், மனத்தாங்கல்கள், குற்றங் குறைகள், இருப்பது இயற்கை. இவற்றையெல்லாம் சமாளித்து, குடும்ப பாரத்தை நடத்துவோர்களைத்தான் சிறந்த குடும்பஸ்தர்களாக நாம் கருதுவோம். அதேபோன்று, கிராமத்திலுள்ள எல்லாச் சிக்கல்களையும் தைரியமாகத் தீர்த்து, ஒற்றுமையோடு சமாளிப்பதில்தான், விசேஷ கவுரவம் உண்டு. பண்பட்ட அனுபவம் காரணமாக, நம் நாட்டில் பலருக்கு இந்தத் திறமை கைகூடிவந்துள்ளது.

பழங்காலத்தில் நமது கிராம பஞ்சாயத்துக்கள்

நம் நாட்டின் மிகப் பழங்கால வரலாறு, இந்த உண்மையை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. கிராமப் பஞ்சாயத்துகள், கிராமத்தையே ஒரு பெரிய குடும்பமாகப் பாவித்து, அதன் பொதுநலனுக்கான எல்லா காரியங்களையும் ஒழுங்குபெற நடத்தி, கிராமத்தின் மதிப்பையும், புகழையும் நிலைநாட்டி வந்துள்ளன. இந்த நிர்வாகத் திறமையை, கிராமப் பஞ்சாயத்துகள் மறந்துவிட்டதன் காரணமாகத்தான், இன்று, கட்சி மனப்பான்மையைக் கண்டு, மருண்டு நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நீந்தத் தெரியாதவன் கடலலைகளைக் குறைகூறும் கதைக்குத்தான், இதை ஒப்பிடவேண்டும். "மீன்குஞ்சுக்கு நீச்சல் கற்றுக் கொடுக்கவேண்டுமா?" என்ற பழமொழி உண்டு. ஆனால், நீந்தத் தெரியாமல் தவிக்கும் மீன்கள் இன்று தோன்றியுள்ள விபரீதம், இன்றைய சமுதாயத்தில் ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தையும் விபரீதத்தையும் நீக்கி, இயற்கை நியதியை மீண்டும் நிலைநாட்டவேண்டியது அவசியம்.

நம் நாட்டிலேயே ஒரு சில ராஜ்யங்களில் கிராம சுயாட்சி பற்றிய பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, சௌராஷ்டிரா ராஜ்யத்தில் கிராமப் பஞ்சாயத்துகள் பலம் பொருந்திய ஸ்தாபனங்களாக வளர்ந்து வருகின்றன. கிராமங்களில் வரிவசூல், நீதி விசாரணை, அமைதி பராமரிப்பு முதலான எல்லா பொறுப்புகளையும் பஞ்சாயத்துகளே ஏற்று நடத்தி வருகின்றன. இதைப் பற்றி ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி அவர்கள், ஏப்ரல் மாத "கிராமநல" இதழில் விரிவாக ஆராய்ந்து எழுதியிருப்பதைக் காணலாம்.

இதில் முக்கியமாக வற்புறுத்தவேண்டிய செய்தி ஒன்றுண்டு. அதாவது, கிராமத்தின் ஜனத்தொகை, வரிவசூல் அளவு, ஆகியவற்றை அடிப்படையாக வைத்து, இப்போதுள்ள சௌராஷ்டிரா ராஜ்யத்தில், பஞ்சாயத்துகளின் முக்கியத்துவம் நிர்ணயிக்கப்படுவதில்லை.

தற்காலத்திய பஞ்சாயத்துக்கள்

கிராம மக்களின் பொதுநல ஆர்வம், பஞ்சாயத்து நிர்வாகிகளின் திறமை, ஆகியவைகளையொட்டியே, ஏ, பி, ஸி, என்ற மூன்று பிரிவுகளாக பஞ்சாயத்துகள் வகுக்கப் பட்டுள்ளன. 'ஏ' பிரிவு பஞ்சாயத்துகள், மொத்த

சர்வோதயபுரத்தில்



....காங்கிரஸ் அக்கிராஸனர் ஸ்ரீ தேபரும்
முதலமைச்சரும்....



வினோபாஜி, உண்ணாவிரதமிருப்பதற்கு முன்
பிரார்த்தனை செய்கிறார்

❖ ❖ ❖

வினோபாஜியும் ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திர பிரசாதும்

❖ ❖ ❖

வினோபாஜியின் சீடர்கள்..............ஜப்பானிலிருந்
வந்திருப்பவர் நூல் நூற்கிறார்.....அமெரிக்கர் துப்பு
வேலையில் ஈடுபடுகிறார்.





.காஞ்சிபுரத்தில் ஆதாரக் கல்வி மகாநாடு
ஆரம்பிக்கப்படுவதற்குமுன், ஆசார்ய
ீ கலேல்கர் விளக்கேற்றி வைக்கிருர்....

ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் மகாநாட்டுக்கு வருகிருர்.

❖ ❖ ❖ ❖

மகாநாட்டில், ராஷ்டிரபதி பேசுகிருர்.

❖ ❖ ❖ ❖

காங்கிரஸ் அக்கிராஸனரும் கல்வி அமைச்சரும் மகாநாட்டில் சொற்பொழிவாற்றுகிருர்கள்.

❖ ❖ ❖ ❖

மகாநாட்டில், சாந்தி நிகேதனைச் சேர்ந்தவர்கள் நடத்திய நடன நிகழ்ச்சி.

❖ ❖ ❖ ❖

ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயணும் விநோபாஜியும் பூதான இயக்கத்தைப்பற்றிப் பேசுகிருர்கள்.







ஆதாரக் கல்வி மகாநாடு





17 JUL 1958

......லாலரபுரத்திலுள்ள மாதர் சங்கம்......

......சித்திரெட்டிபட்டியில், இளைஞர்களும், சிறு பெண்களும் நூல் நூற்கிறார்கள்......

கிராம வரி வசூலில் மூன்றில் இரண்டு பங்கை (66⅔%) கிராமத்தின் பொதுநலத்துக்கு வைத்துக்கொண்டு, மிகுதியை ராஜ்ய அரசாங்கத்துக்குச் சேர்ப்பிக்கும். அதே போல, 'பி', 'ஸி', பிரிவு பஞ்சாயத்துகள், முறையே பாதி, மூன்றிலொரு பங்கு ஆகியவற்றை, (50%, 33⅓%) தாங்கள் வைத்துக்கொண்டு, மிகுதியை அரசாங்கத்துக்குச் செலுத்தும். 'பி', 'ஸி', பிரிவு படிப்படியே வளர்ந்து, 'ஏ' பிரிவாகும் உரிமையும் அந்தந்த பஞ்சாயத்துகளுக்கே வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்த முறையின் மூலம், கிராம நிர்வாகம் திறம்பட நிறைவேறுவதற்கான பொறுப்பை, பஞ்சாயத்துகளுக்கே அரசாங்கம் பகிர்ந்தளித்துள்ளது. வரிவசூல் வேலையைத் தணிக்கை செய்யவும், கிராமப் பஞ்சாயத்துகளின் கணக்கு விவரங்களைப் பரிசீலனை செய்வதற்கும், ராஜ்ய அரசாங்கத்தினர் தக்க ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

இந்த விவரங்களை எல்லாம், சௌராஷ்டிர ராஜ்ய அபிவிருத்தி கமிஷனர் வெளியிட்டபோது, யாராலும் அதை நம்பமுடியவில்லை. குமரிமுனையில் நடைபெற்ற கிராம அபிவிருத்தி ஆராய்ச்சி மன்றத்திற்கு வந்திருந்த பல்வேறு ராஜ்யப் பிரதிநிதிகள் இச் செய்திகளை உண்மை என்றே நம்பவில்லை. கிராம நிர்வாகம் அவ்வளவு சுலபமாக எப்படிமுடியும்? கிராம மக்கள் அவ்வளவு நல்லவர்களாகிவிட்டார்களா? தங்களைத் தாங்களே ஆளும் திறமை கிராம வாசிகளுக்கு, அவ்வளவு விரைவில் எப்படி வந்துவிடமுடியும்? எல்லா விஷயங்களையும் பஞ்சாயத்துகளின் நிர்வாகத்தின்கீழ் விட்டுவிட்டால், அரசாங்கத்தின் பொறுப்பு என்ன ஆகும்? ஜனங்கள் வரியே செலுத்தாமல் இருந்துவிட்டால், என்ன செய்வது?

கிராம பஞ்சாயத்துகளுக்கு அதிகாரங்கள்

இதுபோன்ற பல கேள்விகள் கேட்கப்பட்டன. இவற்றுக்கெல்லாம், விளக்கமான விடைகளை, சௌராஷ்டிர ராஜ்ய அபிவிருத்தி அதிகாரிகள் எடுத்துரைத்தனர். அவற்றைச் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், ஒரே வாக்கியத்தில் கூறலாம். அதிகாரங்களெல்லாம் ஒரே இடத்தில் குவிந்து கிடக்க வேண்டும் என்ற கொள்கையை அரசாங்கம் விட்டுக்கொடுத்து, கிராமப் பஞ்சாயத்துக்களோடு பகிர்ந்துகொள்ள தைரியமாக முன் வந்தால், பொது மக்கள், உறுதியோடும் ஒற்றுமையோடும் பொறுப்பை ஏற்று நடத்தத் தயாராய் வருகின்றனர். பிரச்னைகள் ஏற்படும்போது, பெரும்பாலானவற்றை அவர்களே தீர்க்க முனைகின்றனர். தங்களுக்குள்ளேயே எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து, காலப்போக்கில் தக்க பரிகாரம் காணும் அனுபவத்தைப் பெறுகின்றனர். அரசாங்க அதிகாரிகள் அவர்களுக்குத் தேவையான ஆலோசனையை, அவர்கள் கேட்கும்போது, தக்கமுறையில் கூறி உதவினால், பஞ்சாயத்து நிர்வாகிகளின் திறமை வளர்ந்து, சிறந்த பலன் ஏற்படுகிறது. அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய வரிப்பணம், எந்தவிதக் கெடுபிடியும் இல்லாமல் குறிப்பிட்ட காலத்திற்குள்ளேயே அரசாங்கத்திடம் வந்து சேர்ந்து விடுகிறது.

கிராம சுயாட்சி

இது சௌராஷ்டிர ராஜ்யத்தின் அனுபவம். இதற்குப் பின்னணியாக உள்ள ஒரு சில உண்மைகளையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். சௌராஷ்டிரா என்பது நம் ராஜ்யத்தைவிட மிகச் சிறிய பிரதேசம். பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் சுமார் 250 சிறிய சுதேச சமஸ்தான மன்னர்களின் ஆதிக்கத்தின்கீழ் சிதறிக் கிடந்தது. ஆகவே, அங்கே ஒரே மாதிரியான வரி வசூல் கொள்கையோ, நீதி நிர்வாக முறையோ இல்லாததால், அப்பிரதேச மக்கள் தனிப்பட்ட மன்னர்களின் எதேச்சாதிகாரத்துக்கு உட்பட்டு, பல்வேறு தொல்லைகளுக்கு உள்ளாகி இருந்தனர். நம் நாடு சுதந்திரம் அடைந்தும், அந்த நிலைமை மாறி மக்களிடையே புதிய விழிப்பும் ஒற்றுமையும் உண்டாயின, இன்று அகில இந்திய காங்கிரஸ் மகா சபையின் தலைவராயுள்ள ஸ்ரீ தேபர் அவர்கள் அந்நாட்டின் முதல் அமைச்சராய் பணியாற்றியபோது பரிபூரண கிராம சுயாட்சிக்கான விதைகளைத் தூவினார். கிராம ராஜ்யம் பஞ்சாயத்து ராஜ்யமாக மலரவேண்டும் என்ற காந்திஜியின் இலட்சியத்தை நடைமுறையில் நிறைவேற்றுவதற்கான அஸ்திவாரத்தை இட்டார். கடந்த சில ஆண்டுகளாக, இந்தப் பஞ்சாயத்துகள் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றன. மக்களின் நல்லெண்ணத்தில் முழு நம்பிக்கை வைத்து, கிராம நிர்வாகத் துறையில் பரவல் கொள்கையை மேற்கொள்ளுவதனால் ஏற்படும் பலன்களைக் கணக்கிட, இதன் மூலம் நாட்டுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

உசிலம்பட்டி வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு மே மீ-த்தில், 211 மரக்கன்றுகள் நடப்பட்டன. விவசாய அமைச்சர், உசிலம்பட்டியில், குடிநீர் தேக்கத் தொட்டியைத் திறந்து வைத்தார். மற்றும், அவர், செல்லம்பட்டியிலுள்ள காலனி ஒன்றையும் திறந்து வைத்தார். ஓடுகள் தயாரிக்கும் கூட்டுறவு சங்கம் ஒன்று, உசிலம்பட்டியில் ஆரம்பிக்கப்பட்டது. 40 சர்க்காக்கள் விநியோகிக்கப்பட்டன.

பெரியாறு திட்ட வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு மே மீ-த்தில் 94 சர்க்காக்கள் மக்களுக்குக் குறைந்த விலையில் விநியோகிக்கப்பட்டன. 8,969 சிட்டம் கதர் நூல் மக்களால் நூற்கப்பட்டது. இவ்வட்டாரத்தில் இயங்கும் வார்தா செக்குகள் மூலம் மொத்தம் 2,101 பவுண்டு எண்ணெய் பிழியப்பட்டது. சமயநல்லூரில் பல-நோக்கு கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அம்மையநாயக்கனூரில் சிறுவர் பூங்கா ஒன்றும், மக்கள் மனமகிழ் மன்றமும் திறக்கப்பட்டன. மேலக்கால் கிராமத்துக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டது.

சென்னை ராஜ்யத்தில் தேசிய சாலைகள் திட்டம்

திருச்சிராப்பள்ளியில், 1956, மேமீ 28உ-யன்று, புதிய காவேரிப்பாலத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டு விழாவை நடத்திய யூனியன் போக்குவரத்து துணை அமைச்சர் ஸ்ரீ ஓ. வி. அளகேசன் பேசுகையில், சென்னை ராஜ்யத்தில் தேசிய சாலைகள் அபிவிருத்திக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் சுமார் 4 கோடி ரூபாய் ஒதுக்கப்படுமென்று தெரிவித்தார். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு இப்போது தொடர்ந்து நடக்கப்படுகிற சில திட்டங்களும் அதில் அடங்கும் என்று அவர் கூறினர். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை ராஜ்யத்தில் தேசிய சாலைகள் அபிவிருத்திக்காக அனுமதிக்கப்பட்ட மொத்தத் தொகை 2·66 கோடி ரூபாயென்றும், அதில் 1·34 கோடி ரூபாய் முதல் திட்டகாலத்துக்குள் செலவிடப்பட்டுள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

சென்னை ரஸ்தா வேலைத் திட்டம்

முதல் திட்டத்தில் சென்னையில் நடந்துள்ள ரஸ்தா அபிவிருத்தி வேலை பாராட்டத் தக்கபடி நடந்திருப்பதாக ஸ்ரீ அளகேசன் கூறினர். புதிதாக உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களில் சென்னை-திருச்சிராபபள்ளி-திண்டுக்கல் ரஸ்தாவில் கடிலம் பாலத்தை சீர்திருத்தியமைப்பது, பாம்பன் கால்வாய்க்கு மேலே ஒரு ரஸ்தாப் பாலம் அமைப்பது முதலிய திட்டங்கள் இருக்கின்றன.

“இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைவதற்குள் சென்னை-பெங்களூர், சென்னை-திருச்சிராப்பள்ளி ரஸ்தாக்களை விரிவுபடுத்தி இரட்டைத் தட போக்குவரத்து நடப்பதற்கு ஏற்றவையாய் அபிவிருத்திசெய்யும் வேலையில் நல்ல முற்போக்கு ஏற்பட்டுவிடுமென்று நான் நம்புகிறேன்.” என்று ஸ்ரீ அளகேசன் கூறினர்.

சென்னை ராஜ்யத்து முதல் ஐந்தாண்டுத் திட்ட ரஸ்தா அபிவிருத்தி பற்றிக் குறிப்பிடுகையில், தேசிய சாலைகள் முழுக்க தார் பூசப்பட்டுவிட்டனவென்றும் ராமநாதபுரத்திலிருந்து மண்டபம் வரையில் 23 மைல் நீளத்துக்கு மிக மோசமான மண்வாசி இருந்தும், நல்ல ரஸ்தா அமைக்கப்பட்டுவிட்ட தென்றும் அவர் சொன்னர். சுமார் 75 மைல் நீளமுள்ள ரஸ்தாவில் வண்டிப்பாதை விஸ்தரிக்கப்பட்டு இரட்டைத்தட போக்குவரத்துக்கு வசதிசெய்யப்பட்டிருக்கிறதென்று அவர் தெரிவித்தார். மேற்குக் கரையோர ரஸ்தாவில் இடைவெளியாக நின்ற எட்டு மைல் நீள துண்டு ரஸ்தா அமைக்கப்பட்டுவிட்டது; சுமார் 25 மைல் நீள ரஸ்தா அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது.

பல ராஜ்யங்களுக்கிடையேயுள்ள ரஸ்தாக்களை மத்திய உதவியுடன் அபிவிருத்தி செய்வது விஷயத்தில் சென்னை ராஜ்யத்தில் முதல் திட்டகாலத்தில் 64 மைல் நீள ரஸ்தா அபிவிருத்திசெய்யப்பட்டிருக்கிறது.

தேசிய சாலையில் விழுப்புரத்திற்குத் தெற்கே பொன்னியாறுமீதும், ராணிப்பேட்டைக்கருகில் பாலாறுமீதும், காசி-கன்னியாகுமரி ரஸ்தாவில் அர்ஜுன, வைப்பாறு, வைகை ஆகிய நதிகள்மீதும் பாலங்கள் அமைக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது அல்லது துவங்கப்படவிருக்கிறது என்று ஸ்ரீ அளகேசன் தெரிவித்தார்.

மேற்குக் கரையோர ரஸ்தாவில் நீலேஷ்வர், பெரும்பாய், புச்சுமுகார், பரியங்கோட், குப்பம், குப்ஜா ஆகிய நதிகளின் மீது பாலங்கள் அமைக்கும் வேலையும், சுமார் 200 மைல் நீளமுள்ள ரஸ்தாக்களை அபிவிருத்திசெய்யும் வேலையும் முன்னேறிவருகின்றன. பல ராஜ்ய முக்கியத்துவ, அல்லது பொருளாதார முக்கியத்துவ ரஸ்தா அபிவிருத்திக்கு மத்திய உதவியளிக்கும் திட்டப்படி இந்திய சர்க்கார் மங்களூர்-உடுப்பி ரஸ்தாவில் பாவாஞ்சி, முல்கி, உடையவர் நதிகளின்மீது பாலங்களை அமைப்பதற்கு அனுமதியளித்திருக்கிறர்கள்; கடலூர்-சித்தூர் ரஸ்தாவில் கண்ணமங்கலம், பொன்னியாறு நதிகளில் பாலமமைப்பதற்கும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாலங்கள் சம்பந்தமாய் ஏற்கெனவே வேலை துவங்கிவிட்டது அல்லது வேலை துவங்கவிருக்கிறது என்று ஸ்ரீ அளகேசன் கூறினர்.

அதே திட்டத்தின்கீழ் சுமார் 56 மைல் நீளமுள்ள புதிய ரஸ்தாக்களை அமைப்பதற்கும், 70 மைல் நீளமுள்ள ரஸ்தாக்களை அபிவிருத்திசெய்வதற்கும் வேலை நடந்து வருகிறது.

திருச்சிராப்பள்ளி பாலம்

திருச்சிராப்பள்ளி நகரத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு காவேரிமீது புதியதொரு பாலத்தை அமைக்கும் அவசியம் வெகு காலமாக உணரப்பட்டு வந்திருக்கிறது என்று ஸ்ரீ ஓ. வி. அளகேசன் தெரிவித்தார். “இப்போதுள்ள பாலம் சென்ற நூற்றாண்டில் ஒரு ‘ஆர்ச்’ பாலமாக முதலில் கட்டப்பட்டதென்றும் சுமார் எண்பது வருஷகாலம் அது சேவை செய்தபின் ‘ஆர்ச்’கள் பலங்குன்றுவதுபோல் காணப்பட்டதால் எடுத்துவிடப்பட்டனவென்றும் கூறப்பட்டிருக்கிறது. 1927–28–ல் பழைய பியர்கள்மீது புதிய கட்டுமானம் கட்டப்பட்டு 18 அடி ரஸ்தாவும் இருபுறத்திலும் நடை பாதையும் அமைக்கப்பட்டன. தற்கால துரித வேக மோட்டார் போக்குவரத்துக்கு அது மிகவும் குறுகலாய் இருக்குமென்பதுடன்கூட அந்தப் பாலம் மிகவும் பழசாகிவிட்டது. அத்துடன் அடிக்கடி பழுதடைந்தும் வருகிறது.”

இந்திய சர்க்கார் தேசிய சாலைகளாக ஒப்புக்கொண்ட ராஜ்ய ரஸ்தாக்களின் அபிவிருத்தி—பராமரிப்பு பொறுப்புக்களை 1947-ம் வருஷம் ஏப்ரல் மீ 1உ முதல் இந்திய சர்க்காரே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அத்தகைய ரஸ்தாக்களில் சென்னை-திருச்சி-திண்டுக்கல் ரஸ்தாவும் ஒன்றாகும்.

இப்போதுள்ள ரஸ்தா—நதி சந்திப்பு ஸ்தானத்தில் ஒரு பாலத்தை அமைக்கும்படி இந்திய சர்க்கார் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். இப்போது ஏற்கெனவே உள்ள பாலத்தை திருத்தியமைப்பதுபற்றிக் கவனிப்பதற்கில்லை: ஏனென்றால் அதிலிருந்து திருச்சி பக்கத்தில் செல்கிற பாதை மிக நெருக்கடியான பிரதேசம் வழியாய் செல்லுகிறது. துரிதவேக போக்குவரத்துக்கு அது ஏற்றதல்ல. புதிய பாலமாவது திருச்சியைக் கடந்து நெடுந்தூரம் செல்கிற சுற்று வழியில் அமைந்திருக்கும்.

இதர திட்டங்கள்பற்றி யூனியன் போக்குவரத்து உப மந்திரி பேசுகையில் சென்னையிலுள்ள தேசிய சாலைகள் திட்டத்தில் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் புகளூரில் காவேரிமீதும், செங்கற்பட்டுக்கருகில் பாலாறுமீதுயாக இரண்டு பெரிய பாலங்கள் கட்டப்பட்டன என்று தெரிவித்தார். சேலம், கொச்சி-கன்னியாகுமரி ரஸ்தாவில் நொய்யலாற்றுப்பாலம், காசி–கன்னியாகுமரி ரஸ்தாவில் கொடவனூர், காவேரிப்பட்டணம் பாலங்கள், இப்போது கட்டப்பட்டுள்ள இதர பாலங்களில், முக்கியமானவை.

மேல்கரையில் பையஸ்வாமி நதியில் ஒரு பாலங்கட்டும் வேலை பூர்த்தியாகிவிட்டதென்றும் ஸ்ரீ அளகேசன் கூறினார்.

திருவண்ணாமலை வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, மே மாதத்தில், ராயம்பேட்டை-நூக்கம்பாடி-ராஜன்தாங்கல் முதலிய ஊர்களில் சிரமதான இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. தெருக்கள் துப்புரவு செய்யப்பட்டு, அவைகளின் நடுவே கிடந்த பெருங்கற்களெல்லாம் அகற்றப்பட்டன. சேரிகளில், 40 வடிசாக்கடைக் குழிகள் தோண்டப்பட்டன. வட்டார அபிவிருத்திக் கமிட்டி கூட்டம் 1956, மே, 23-ந் தேதியன்று நடைபெற்றது. ஸ்ரீ தேவராஜ முதலியார், எம். எல். ஸி., ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளை, எம். எல். ஸி. முதலியோர் வட்டார அபிவிருத்தித் திட்டத்தின் சிறப்பை எடுத்துக்கூறி, மக்கள் பெருவாரியாக முன்வந்து, திட்ட வேலைகளில் பங்கெடுத்துப் பயன் பெறவேண்டும், என்றும் கூறினார்கள். மூன்று கிணறு வேலைகள் பூர்த்தியாயின. 25 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. 43 மணங்கு ரசாயன உரம் விநியோகிக்கப்பட்டது. 24 ஏக்கர் பரப்பில், பசுந்தாளுரப் பயிர் சாகுபடி செய்யப்பட்டது. முதியோர் பள்ளி ஒன்றும், இரு மக்கள் மனமகிழ் மன்றங்களும், ஒரு வாசகசாலையும், ஒரு பூங்காவும், 1956, மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

ஓம் : தத் : ஸத் :

K. T. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியின்

'மேல்மாயில் மருந்து'

ரிஜிஸ்டர்டு

1½ நூற்றாண்டுகளாக உலகப் பிரசித்திபெற்ற, மேகரோக நிவாரண எண்ணெய் லேகியம்.

சரும நோய்களால் துன்பப்படுவோருக்கு புத்துயிரளிக்கும் புனித சஞ்சீவி.

கருநிற, செந்நிறப் படைகள், ஆறுத புண்கள், கைகால் எரிச்சல், ரத்த பலக்குறைவு, சிரங்கு, நமைச்சல் மற்றும் எல்லாவித சரும வியாதிகளையும் குணப்படுத்தும்.

ஸ்ரீ பரமாத்ம தைலம்
(ஸ்நானத்திற்கு சிரேஷ்டமானது)
கண் எரிச்சல், கண் மங்கல், மூலக்கொதிப்பு, மூல உஷ்ணம், ரத்த பீநிசம், காமாலை, உஷ்ண இருமல், சுவாசக் கோளாறுகள் முதலியவைகளை நீக்கி குளிர்ச்சி தரும். .. .. 8 அவுன்ஸ் ரூ. 2-8-0.
தபால் செலவு ரூ. 1-4-0.

முழு விபரங்களுக்கு எழுதுங்கள்.

40 நாள் (1 மண்டலம்)
எண்ணெயும், லேகியமும்
விலை ரூ. 6 0 0.
தபால் செலவு ரூ 1-0-0.
முழு விவரங்கள் கேட்லாக்கில் பார்க்கவும்.

K. T. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரி அண்டு சன்ஸ்

5/22, மேல்மாயில் P.O. (N. A. Dt.)

சிரமதான அனுபவங்கள்

[ஸ்ரீ S. P. பால் ராஜ், கிராம சேவக், ஸ்ரீ வில்லிப்புத்தூர் வட்டாரம்]

[உழைப்பின் மதிப்பு, சிரமதானத்தின் சிறப்பு ஆகியவற்றைப்பற்றி விளக்கிவிட்டு, தமது அனுபவங் களையும் எடுத்துக் கூறுகிறார் இக் கட்டுரையாளர்.

—ஆசிரியர்]

உழைப்பு மதிப்பிற்குரியது. சிலர் தினமொன்றுக்கு ஒரு ரூபாய்க்கு உழைக்கலாம். சிலர் எட்டணு மதிப்பிற்கு உழைக்கலாம். பண வசதி உள்ளவர்கள் பணத்தை தான மாகக் கொடுக்க முடியும். பணமில்லாத ஏழைகளும் தங்கள் உழைப்பைக் (சிரமம்) கொடுக்கிறபோது அதுவும் தானமாகிறது. அதுவே சிரமதானம் என்பது. சொல்லப் போனால் திரவியதானத்தைக் காட்டிலும் சிரமதானம் மதிப்பிற் குரியது. எவ்வாறெனில் பணவசதி உள்ள வர்கள் மனம் மட்டும் இருந்தால் சரீர சிரமமின்றி பணத் தை எடுத்துக் கொடுத்துவிடலாம். ஆனால் சிரமதானத் தில் மனமும் வேண்டும். அத்துடன் உடலும் கஷ்டப்பட்டு உழைக்கவேண்டும். ஆகவே சிரமதானம் சிறந்த தொன்று என்பதற்கு ஐயமில்லை.

நான் 1949 முதல் அபிவிருத்தி இலாகாவில் கிராம சேவ கராக ஊழியம் செய்து வருகிறேன். மங்கிப்போன நமது பண்பாடுகளைத் துலங்கச் செய்வதும் கிராம மக்களிடை யே மனமாற்றம் செய்வதும் எளிய காரியமல்ல. எனது ஊழிய காலத்தில் பல கிராமங்களில் மக்கள் சிரமதானம் செய்திருக்கின்றனர். உதாரணத்திற்கு இரண்டொரு காரி யங்களைக் குறிக்க விரும்புகிறேன்.

மல்லி பிர்க்கா கொளிஞ்சிப்பட்டி என்ற ஊரில் 25 ஹரிஜன வீடுகள் உண்டு. அவர்களுக்குக் குடிதண்ணீர் கிடையாது. அபிவிருத்தித் திட்டத்தில் கிணறு சாங்ஷன் ஆயிற்று. கடப்பாரை, சம்மட்டி, ஆப்பு இவற்றிற்கு வாடகைக்காக மட்டும் சிறு தொகை (ரூ. 10) சேகரித்தார் கள். தினமொன்றுக்கு 5 பேர் வீதம் கிணறு தோண்டி னர். முதல் நாள் வேலைக்கு வந்தவர் பிந்திய நாலு நாளைக்குத் தமது சொந்த வேலைக்கும் போய்க்கொள்வர். ஆறுவது நாள் சிரமதான வேலைக்கு வருவார். சில நாட்களில் கிணறு தோண்டும் வேலை முடிந்தது. தண் ணீர் போதிய அளவு கிடைத்தது. கிணறு தோண்டிய வகைக்காக சுமார் 250 ரூபாய் சர்க்கார் கிராண்டு கிடைத் தது. இத் தொகை கொண்டு செங்கல் சிமிண்டு வாங்கினார் கள். கொத்தனுக்கு கூலியும் கொடுத்தார்கள். மற்ற படியுள்ள சில்லரை வேலைகளனைத்தையும் முன் போலவே மக்கள் முன்வந்து செய்தார்கள். கட்டிட வேலை முடிந்தது முடிவாக சர்க்கார் கிராண்டு ரூ. 750 கிடைத்தது. இத் தொகை முழுவதும் மக்கள் சிரமப்பட்டு உழைத்ததன் மூலம் கிடைத்தது. மக்களுக்குத் தேவையான கிணறும் கிடைத்துவிட்டது. பணமும் மீந்திருக்கிறது. இத் தொகை யை ஊர்ப் பொது நிதியாக வைத்துக்கொண்டார்கள். சிவந்திப்பட்டி என்ற ஊரில் நாடார் உயர்தரப் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும், பொது மக்கள் சிலரும் சேர்ந்து தங்கள் பாடசாலைக்கு ஒரு காம்பவுண்டு சுவர் எழுப்பினார்கள். 100 அடி நீளமும் 2 அடி அகலமும் 5 அடி உயரமுள்ள சுவரை மூன்று தினங்களில் கட்டி முடித்தார்கள். டிசுவர் கல்லும், மண் சாந்தும் சேர்ந்தது சுமார் மதிப்பு ரூ. 100 ஆகும். ஒரு காசுகூட செலவின்றி கட்டப்பட்டது.

மகாராஜபுரத்தில் பயிற்சி பெற்ற கிராமத் தலைவர் கள் வாரந்தோறும் கிராம சேவை செய்கின்றனர்.

தைலாகுளம் என்ற ஊரில் சிரமதானத்தினால் 2 பர்லாங்கு ரோட்டு ரூ. 1,000 மதிப்பில் போடப்பட்டது.

சிரமதான வேலைகள் செய்வதினால் மக்கள் தங்கள் சொந்த நன்மைக்காக வேலை செய்வதாக நினைக்கிறார்கள். செய்த வேலையை பாதுகாக்கின்றனர். உழைப்பை மதிக் கின்றனர். ஜாதி பேதம் வர்க்க பேதம் ஒழிகின்றன. பகுதி அபிவிருத்தி அதிகாரி அவர்கள் பிராந்திய M. L. A. க்கள் மற்றும் ஊழியர்கள் இவ் வேலையில் ஈடுபடுகின் றனர். இதன் மூலம் அதிகாரிகள் மனப்பாங்கு மாறு கிறது. சேவைக்குத் திரும்புகின்றனர். கிராமங்கள் தன் னிறைவு கொள்கின்றன. திட்டத்தை மக்கள் நன்கு புரிந்துக் கொண்டு சேவை செய்கின்றனர்.

நான் கண்ட வளர்ச்சித் திட்டம்

[ஸ்ரீ. கே. பரமசாமி, B.A., சமுதாயக் கல்வி அமைப்பாளர், திருவண்ணாமலை.]

[முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், வளர்ச்சித் திட்ட வட்டாரங்களிலே, ஏற்பட்டிருக்கும் மாறுதல்களைப்பற்றி இக்கட்டுரையில் விவரிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, விவசாயம், கால்நடை விருத்தி, கூட்டுறவு, சமுதாயக் கல்வி, கதர் முதலிய துறைகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறது.

—ஆசிரியர்]

முதல் ஐந்தாண்டு திட்ட காலத்தில் கிராமங்களிலே ஆரவாரமற்ற அற்புதப் புரட்சி ஆக்க வேலைக்காக ஏற்பட்டிருப்பதைக் காணுகிறோம். அதன் பயனாக கிராம மக்கள் தங்கள் நிலையை உணர்ந்து விட்டார்கள். முன்னேற வேண்டுமென்ற முடிவான எண்ணத்தோடு இன்று எழுச்சியுடன் புரட்சி செய்கிறார்கள். தங்கள் தங்கள் கிராமங்கள் தன் சக்திக்குத் தகுந்தாற்போல் முன்னேற வேண்டுமென்று தீர்மானித்து விட்டார்கள். அரசாங்கப் பணியாளர்கள் கிராமங்களுக்குச் சென்றால் முன்போல் பயந்தோடாமல், நெருங்கிவந்து தன் உரிமையை நிலைநாட்டி செய்யவேண்டிய வேலைகளின் பட்டியலை ஒப்பிக்கின்றார்கள். அதோடு மட்டுமல்ல. உழைக்கத் தயார் ஊதியம் தாருங்கள் என்று கேட்கின்றார்கள். குடிக்கக் கஞ்சியில்லை என்று கேட்ட மக்கள் இன்று வானொலி நிலையம் கேட்கின்றார்கள். இருக்க இடமில்லையே என்று கூறுபவர்கள், நூல் நிலையம் தாருங்கள் என்று கேட்கின்றார்கள். உடுக்க உடை வேண்டுமென்று சொல்லுபவர்கள் சீர்திருத்த நாடகம் தேவை என்கிறார்கள். இதனால் உடுக்க உடையும், உண்ண உணவும் இருக்க இடமும் தாராளமாக மக்களுக்கு கிடைத்து விட்டது என்று பொருளல்ல. அந்த அளவிற்கு மக்களின் சுயநலம் தேய்ந்து பொதுநலம் வளருகிறதென்று பொருள். எந்தெந்த வகையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றதென்று ஒரு சிறிது விளக்குவது அவசியம்.

விவசாயம்

பண்டைய முறையைவிட்டு—திருந்திய—சிக்கனமான முறையிலே விவசாயம் செய்யத் தலைப்பட்டு விட்டார்கள். பூமி விளையவில்லையே என்று பொல்லாங்கு கூறாமல் உரம் போடுகின்றேன் உணவு தா என்று கேட்கின்றார்கள்.

"இலமென்றசையி இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்."

என்ற கருத்தை மக்கள் உணர்ந்து தங்களின் உழைப்பையும், பயிருக்கேற்ப உரமும் தர உணர்ந்து கொண்டார்கள். விவசாயிகளுக்கும் காலம் வருமா? என்று ஏங்கியவர்கள் நம்பிக்கை நட்சத்திரம் உதித்துவிட்டதென்று தெரிந்து கொண்டார்கள். இந்த நாட்டின் பெரும்பகுதியை உரிமையாக்கி உழைத்துழைத்து உருக்குலைந்த விவசாயப் பெருங் குடிமக்கள் எங்களுக்கும் வாழ்வு மலர்ந்தது என்று கூறும்போது யார்தான் மகிழாமல் இருக்க முடியும்?

கால்நடைகள்

உலகத்திலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பாகம் நமது நாட்டில் இருக்கின்றனவென்று கூறி மகிழ்கிறோம். ஆனால் அவைகளின் வளத்திலும், பால் கொடுக்கும் அளவிலும் மிக மிக குறைவான நிலையிலிருக்கின்றோம். அதனால்தான் சமுதாய வளர்ச்சித் திட்டம் விவசாயிகளின் உயர்வை விரும்பும்போது அவர்களின் உற்ற தோழன் கால்நடையை கவனிக்காமல் இருக்கமுடியாது. நல்ல ஜாதிக் காளைகளை கிராமங்களுக்குக் கொடுத்து அதன் மூலம் நல்ல இனத்தை விருத்தி செய்ய வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. கால் நடைகளுக்கு வியாதி வந்தால் மந்திரவாதியைக் கூப்பிட்டு காண்பிப்பதும், சரியாகாவிட்டால் மாட்டு வைத்தியம் தெரியுமென்று கூறிக்கொண்டிருக்கும் ஒரு சிலரிடம் காண்பிப்பதும், பிறகு அதுவும் பலிக்காவிட்டால் "தலைவிதி" யாரை விடும் என்று சொல்லி நொந்து கொள்ளுவார்கள். ஆனால் இன்று கிராமங்களிலே காணுகிற காட்சி ஓரளவிற்கு மகிழ்ச்சியூட்டுவதாக இருக்கிறது. மாடுகளுக்கு வியாதி வந்துவிட்டால் உடனே கால்நடை மருத்துவரை நாடி ஓடிவரும் மக்கள், பழமையிலிருந்து புதுமைக்கு வந்து கொண்டிருக்கின்றார்கள்—மேகத்திலிருந்து விடுபடும் மதியைப் போல. அதுமட்டுமல்ல. கோழிப்பண்ணைகள் வைத்து வருவாயைப் பெருக்கவும் பழகிவிட்டார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, கால்நடை மருத்துவ நிலையம் கட்ட மக்களே முன் வந்து விட்டார்கள் என்று சொன்னால் இத்துறையிலே ஏற்பட்ட முன்னேற்றம்பற்றி அதிகமாகக் கூற வேண்டுவதில்லை.

கூட்டுறவு

சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் இத்துறையில் செய்து வரும் நல்ல பல காரியங்கள் மக்களுக்கு நன்மை பயப்பனவாக இருக்கின்றன. பல காரிய கூட்டுறவு சங்கங்கள் கிராமங்களில் ஏற்படுத்தி அதன்மூலம் பல வேலைகள் நடந்து வருகின்றன. கிராமங்களிலே வாழும் பெருவாரியான

மக்கள் இதிலே அங்கத்தினர்களாக சேர ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் கூட்டுறவு மலரின் மணத்தை மாளிகைக்கு மட்டுமல்லாமல் மண் குடிசைக்கும் பரப்ப ஏற்பாடு செய்யப்படுகிறது. கூட்டுறவின் கீழ் கிராம மக்கள் கடன் வசதி பெறவும், அதிலே அங்கத்தினர்களாகச் சேரவும், தகுதியும், நாணயமுள்ளவர்களாக்க சமுதாய வளர்ச்சித் திட்டம் விவசாயிகளின் மத்தியில் சிறந்த பணியாற்றி வருகிறது. அதுவும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இன்னும் தீவிரமாக இத்துறையில் பணியாற்ற வழி வகைகள் இருப்பது கண்டு மக்கள் பூரிக்கின்றார்கள்.

சமுதாயக் கல்வி

இக்கல்வி புதிதாகத் திடீரென்று இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட சரக்கல்ல. பழங்காலத்திலிருந்தே நிலவி வந்த கல்விதான். குடும்ப வாழ்வியல் கிராம வாழ்வியல் இவைகளை மகாகாவியங்கள் மூலமாக இக்கல்வி இந்த நாட்டிலே போதிக்கப்பட்டு வந்தது. இதன் குறிக்கோள் மக்களை வளர்ந்து முன்னேறி தொழில் படும் குடிகளாக மாற்றுவது, சமூக முன்னேற்றத்திற்கானவற்றை சிந்தித்து உணரச் செய்ய மக்களைத் துண்டுவது, தானும் நல்ல முறையில் வாழ்ந்து மற்ற ஒவ்வொருவரையும் அதுபோலவே நன்கு வாழ அனுமதிப்பதாகும். மேலும் இக்கல்வி கிராமத்தின் முழுவளர்ச்சியையும் கவனிப்பது. பொருளாதாரம், சுகாதாரம், கலாச்சாரம் ஆகிய மூன்றையும் நன்கு வளர்ப்பது. ஆகவே மனம், அறிவு, உடல் இம்மூன்றையும் வளம் பெறச் செய்வதே சமூகக் கல்வியாகும். இத்துறையில் இன்று கிராமங்களில் சிறப்பான முறையில் காரியங்கள் நடைபெறுகின்றன. நூல் நிலையங்கள், வானொலி நிலையங்கள், குழந்தைகள் பூங்கா, மாதர் சங்கங்கள், நாடக மன்றங்கள் பலப்பல நிறுவப்பட்டு மக்கள் மத்தியிலே புது உணர்ச்சியும், எழுச்சியும் ஏற்பட்டு பூரணமானதும், நிறைவானதுமான வாழ்வு வாழ மக்கள் ஏறு நடைபோட்டுக்கொண்டு முன் செல்லுகிறார்கள்

கதர்

மகாத்மா காந்தியடிகளின் எண்ணம் இன்று நடைமுறை தத்துவமாகிவிட்டது. கிராமங்களில் எங்கு பார்த்தாலும் கதர் உடுத்தும் ஆணும், பெண்ணும் அதிக அளவில் இருக்கின்றார்கள். அதுவும் இராட்டைக்கு இருக்கும் கிராக்கி அப்பப்பா! சொல்லமுடியாது. எந்த கிராமங்களுக்குச் சென்றாலும் முதல் கேள்வி இராட்டைதான். அந்த அளவிற்கு இன்று மக்கள் இராட்டையின் தத்துவத்தைப் உணர்ந்து விட்டார்கள். சுய தேவைப் பூர்த்தியை நோக்கி மக்கள் மிக வேகமாகச்சென்று கொண்டிருக்கின்றார்கள். இது ஒன்றே கட்டளைக் கல் நாட்டின் முன்னேற்றத்திற்கு ஏழைகளின் வாழ்வை எழிலாக்க இத்திட்டம் சிறந்த முறையில் உதவுகிறது.



......முதலமைச்சர் ஸ்ரீ கே. காமராஜ், 5–4–56 யன்று, சர்வோதய கிராமத்தில் பூதான தொண்டர்கள் முகாமில் நடைபெற்ற கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர்.



......அகத்தாபட்டியில் உள்ள ஹரிஜன காலனி......

மேற்கூறிய துறைகளில் கிராமப் புறங்களில் பல பணிகள் செய்யப்படுவதால், கிராம மக்கள் தங்கள் நிலை உணர்ந்து முன்னேற முனைந்து விட்டார்கள். வளர்ச்சித் திட்டம் ஒரு வரப் பிரசாதமென்றும்—தொல்லைகளை போக்கும்படியான மருந்தென்றும்—இத்திட்டம் இல்லையேல் கிராமங்கள் வளம் பெற முடியாதென்றும் உணர்ந்து காந்தியடிகள் கூறியபடி "இந்தியாவின் உயர்நிலை அதனுடைய கிராமங்களில்தான் இருக்கிறதென்றும், அந்தக் கிராமங்கள் அனைத்தும் பிறர் கையை எதிர் பாராமல், தம்முடைய தேவையை தானே பூர்த்தி செய்து கொள்ளும் சக்தியும், தகுதியும் பெறுகின்றனவோ" அன்றுதான் இந்தநாடு பூரணவிடுதலை பெற்ற சுதந்திர குடியரசாக விளங்க முடியும்" என்ற நிலைக்கு மக்கள் மிகமிக துரிதமாகப் போய்க்கொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில் மக்கள் மன்றங்களிலே உலவி வருபவர்களும், அரசாங்கமும், அரசாங்க அலுவலர்களும், மக்களுக்குத் தொண்டு செய்ய விழையும் தொண்டர்களும் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் ஏற்பட்ட பயனும் படிப்பும் ஏற்று இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் அவைகளை களைப்புகுத்தி செயல்பட வைத்து, வருங் காலத்திற்குப் பாதை வகுப்பது ஒவ்வொருவருடைய கடமையாகும். குறிப்பாக வளர்ச்சித் திட்டத்தோடு ஏனைய இலாக்காக்களும் இணைந்து ஒன்றுபட்டுச் செல்வது மிக மிக அவசியம் என்பதை கூறித்தான் ஆகவேண்டியிருக்கிறது. இணைந்து செல்லாததால் இடையிலே ஏற்படும் கஷ்டங்கள், செயல்படும் வேகத்தைக் குறைக்கின்றன. இந்த நிலை இல்லாமல் எல்லோரும் ஒன்றுபட்டு, இணைந்து எடுத்துக்கொண்ட மாபெரும்பணியினை செம்மையுடன் செய்யவும் முதல் ஐந்தாண்டு திட்டத்தால் ஏற்பட்ட வெற்றியை எண்ணி நன்றிகூறி வழியனுப்பி விட்டு, நேர்மைக்கரம்கொண்டு, உள்ளத் தூய்மையுடன், உறுதியான எண்ணத்தோடு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு வருக ! வருக !! என வரவேற்புக்கூறி இத்திட்டத்தின் மூலம் காந்தியும், வள்ளுவனும் கண்ட நாட்டை நிர்மாணிக்க முனைவோமாக

வாழ்க காந்தீயம்

வளர்க வளர்ச்சித் திட்டம் !

செய்தித் திரட்டு

சென்னை விவசாயிகளின் அகில இந்திய சுற்றுப் பிரயாணம்

அகில இந்திய சுற்றுப்பிரயாணத்துக்காக, சென்னை விவசாயிகள் கோஷ்டி ஒன்றை ஏற்பாடு செய்ய அரசினர் உத்தேசித்துள்ளனர். சென்னை ராஜ்யத்திலுள்ள விவசாயிகள், இச்சுற்றுப்பிரயாண கோஷ்டியில் சேரலாம். பிரயாணத்துக்காக ஆகும் நிகர செலவு நபருக்கு சுமார் 200 ரூபாய். ரயில் கட்டணத்தில் சலுகை அளிக்கப்படுவதுடன், கோஷ்டியினர் விஜயம் செய்யும் ஸ்தலங்களில் சம்பந்தப்பட்ட ராஜ்ய அரசாங்கத்தார் வேண்டிய சௌகரியங்களை அளிக்கவும் ஏற்பாடு செய்யப்படும். உணவுக்காகும் செலவையும், போக்குவரத்துக்காகும் செலவையும், கோஷ்டியினரே ஏற்றுக்கொள்ளவேண்டும். கோஷ்டியினரால் அமைக்கப்படும் கமிட்டி உணவு, ஜாகை வசதி முதலியவற்றைக் கவனித்துக்கொள்ளும்.

சுமார் 6,500 மைல் தூரம் இக்கோஷ்டி சுற்றுப்பிரயாணம் செய்யும். இப்பிரயாணம் ஆரம்பமாகி முடிவடைய சுமார் 30 நாட்களாகும்.

சிந்திரி உர உற்பத்திசாலை, சித்தரஞ்சன் தொழிற்சாலை, பக்ராநங்கல் அணை, தாமோதர் நதிப் பள்ளத்தாக்கு, விசாகப்பட்டணம் கப்பல் கட்டும் தொழிற்சாலை, நீலோகேரி சமுதாய அபிவிருத்தி ஸ்தலம், துங்கபத்ரா அணை, பங்களூர் விமான உற்பத்திசாலை ஆகிவற்றைக் கண்டு களிப்பதுடன், இக்கோஷ்டி கல்கத்தா, ஆக்ரா, காசி, பம்பாய், புது டில்லி முதலிய முக்கிய நகரங்களுக்கும் விஜயம் செய்யும்.

இச்சுற்றுப்பிரயாணம் ஆரம்பமாகும் தேதி கிராம நலத்தில் பின்னர் அறிவிக்கப்படும். வட இந்தியாவின் சீதோஷ்ண நிலையை அனுசரித்து, சுற்றுப்பிரயாணத் திட்டம் உருவாக்கப்படும்.

இச்சுற்றுப் பிரயாண கோஷ்டியில் சேர விரும்பும் விவசாயிகள், அவர்களுடைய ஊர்களுக்கு அருகிலுள்ள வட்டார அபிவிருத்தி அதிகாரிகளிடம் மனுச் செய்து கொள்ளலாம்.

குண்டடம் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, மே மாதத்தில், 26 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. 5 ஏக்கர் பரப்பில், கம்பு, (CO. 3) பயிருக்காக, ஆரம்ப விதைப் பண்ணையும், 11·50 ஏக்கர் பரப்பில், கிராம விதைப் பண்ணையும் ஆரம்பிக்கப்பட்டன. இனத் தரமிகுந்த கோழிமுட்டைகள் 300 விநியோகிக்கப்பட்டதுடன், 350 ஆடுகளுக்கு நோய் சிகிச்சை செய்யப்பட்டது. குப்பிச்சிபாளையத்தில், மக்கள் மன மகிழ் மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. போஷாக்குக் குறைவாக உள்ள குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் வைடமின் மாத்திரைகள் விநியோகிக்கப்பட்டன. ருத்ராவதியிலும், தாயம்பாளையத்திலுமுள்ள சேரிகள், கிராம சேவிகைகளால் துப்புரவு செய்யப்பட்டன். 1956, மே மாதத்தில் சுமார் 828 ரூபாய் பெறுமான கதர் விற்கப்பட்டது. பொதுவாக, இவ்வட்டாரத்தில், 1956, மே மாதத்திலே மழை பெய்ததாகத் தெரியவில்லை. கிணறுகளில் நீர்மட்டம் இறங்கி விட்டது.

ஆத்தூர் வட்டாரத்தில்

சேலம் ஜில்லாவிலுள்ள ஆத்தூர் வட்டாரத்திலே, 1956, மே மாதத்தில் 145 கெஜ நீளத்துக்கு சாக்கடைக்கால் கட்டப்பட்டதுடன், 43 வடி சாக்கடைக் குழிகளும் தோண்டப்பட்டன. முதலுதவி நிலையங்களில் 323 பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பிரசவ மருத்துவ உதவியாளர்களால் 25 பிரசவங்கள் கவனிக்கப்பட்டன. நவகுறிச்சி, உலிபுரம்புதூர், வீராகனூர், காட்டுக்கோட்டை, சித்தேரி, வேப்பநத்தம், ஆனையம்பட்டி முதலிய கிராமங்களில் சிரமதான இயக்கமும் வெற்றிகரமாக நடைபெற்றது. சார்வாய்புதூரில் வ்வசாய இளைஞர் மன்றமும், சித்தேரியில் இளைஞர் மன்றமும் ஆரம்பிக்கப்பட்டன. 30 சர்க்காக்கள் விற்கப்பட்டன. சுமார் 855 ரூபாய் பெறுமான கதர் நூல் நூற்கப்பட்டது. சுமார் 347 ரூபாய் பெறுமான கதர் துணி விற்கப்பட்டது. நாவலூரில் சிறுவர் பூங்கா ஒன்று சென்னை அரசாங்க ஹரிஜன நல டைரக்டரால் திறந்து வைக்கப்பட்டது.

பெத்தநாயக்கன்பாளையம் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, மே மாதத்தில், 21 ஏக்கர் பரப்பில், பழத்தோட்ட சாகுபடி ஆரம்பிக்கப்பட்டது. 28 டன் ரசாயன உரம் விநியோகிக்கப்பட்டது. 25 ஏக்கர் தரிசு நிலம் சாகுபடிக்காகப் பண்படுத்தப்பட்டது, 200 அடி நீளத்துக்கு சாக்கடைக்கால் அமைக்கப்பட்டது. பிரசவ மருத்துவ உதவியாளர்கள் 126 கர்ப்பிணிகள், 161 தாய்மார்கள் ஆகியோர்களின் உடல் நலனைக் கவனிக்க, வைத்திய பரிசோதனை செய்தார்கள். பனைவெல்லத்திலிருந்து, மிட்டாய் வகைகளைத் தயாரிப்பதற்குரிய யந்திர சாதனங்களில் சிலவற்றை, பெத்தநாயக்கன்பாளையம் மாஜி கள்ளிறக்குவோர் கூட்டுறவு சங்கம் விலைக்கு வாங்கியிருக்கிறது. மூன்று பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. பழுதடைந்த 157 சர்க்காக்கள் சீர் செய்யப்பட்டன.

எழுபது சர்க்காக்கள் விநியோகிக்கப்பட்டன. 500 சிட்டம் கதர் நூல் மக்களிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டது. 70 ரூபாய் பெறுமான கதர் விற்கப்பட்டது.

கிருஷ்ணகிரி வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, மே மாதத்தில், 234 பவுண்டு சிறுதான்ய விதைகள், 640 பவுண்டு எண்ணெய் வித்துக்கள், 72 பவுண்டு பசுந்தாளுரச் செடி விதைகள், 13¼ பவுண்டு காய் கறி விதைகள், 1·5 பவுண்டு லங்க் பாஸ்பைட் முதலியவை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. 209 கோழிகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. முதியோர் பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. பொதுக்கிணறுகள் 10 சுத்தம் செய்யப்பட்டு, 8 வடிசாக்கடைக் குழிகள் தோண்டப்பட்டன. தாய், சேய் நலனைக் கவனிக்க, மொத்தம் 321 பேர்களை, மருத்துவ உதவியாளர்கள் வைத்திய பரிசோதனை செய்திருக்கிறார்கள். இரு குடிநீர் கிணறுகள் கட்டப்பட்டன.

காவேரிபட்டினம் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, மே மாதத்தில், 22 பவுண்டு C.O. 3 கம்பு விதைகள், 240 பவுண்டு TMV. 2 வேர்க்கடலை வித்துக்கள், 5,601 பவுண்டு TMV. 3 வேர்க்கடலை வித்துக்கள், 4 பவுண்டு பயிர்பூச்சி கொல்லி மருந்துகள், 82 பவுண்டு தக்கைப்பூண்டு விதைகள் ஆகியவை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. 30 கம்போஸ்ட் உரக்குழிகள் தோண்டப்பட்டன. இனத்தரமிகுந்த சேவல்கள் 33 கிராம மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. குஷ்ட நிவாரண வாகன மருந்தகம், தத்ரஹள்ளி, சின்னமுத்தூர், பள்ளிபட்டி, மோர்னஹள்ளி, மல்லுபட்டி, வெள்ளிச்சந்தை முதலிய கிராமங்களுக்கு விஜயம் செய்தது. அக் கிராமங்களிலுள்ள குஷ்டரோகிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. ஜக்க சமுத்திரத்தில் மாதர் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. 9 கிராமங்களில் சிரமதான இயக்கம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. 1956, மே மாதம் 10-ந் தேதி முதல் 21 தினங்கள் வரை, பாரத சாரணர் கிராம சேவை முகாம் நடை பெற்றபோது, சாரணர்கள், நரிமேடு, ஜமேதார்மேடு,

மக்கள் மனமகிழ் மன்றம், கீழ்ப்பட்டு



அத்திமூர் மக்கள் மனமகிழ் மன்றம்

போத்தபுரம், புலிகண்டியூர் முதலிய கிராமங்களில், துப்புரவு வேலை இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தினார்கள். காவேரி பட்டினத்திலிருக்கும் வார்தா செக்கு மூலம் 15 மணங்கு 4 பவுண்டு எண்ணெய் பிழியப்பட்டது. 27 மணங்கு 42 பவுண்டு எண்ணெய் பிண்ணாக்கும் கிடைத்தது. எண்ணெய் விற்போர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு, எண்ணெய் பிழிவதற்குரிய பயிற்சி அளிக்கப்பட்டது.

புதுக்கோட்டை வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956, மே மாதத்தில், 3 பர்லாங்கு நீளத்துக்கு புதிதாக பாதை அமைக்கப்பட்டது. 29 கம்போஸ்ட் உரக்குழிகள் தோண்டப்பட்டன. 489 மணங்கு ரசாயன உரம் விநியோகிக்கப்பட்டது. 5·20 ஏக்கர் பரப்பில், பசுந்தாளுரச் செடிகள் பயிரிடப்பட்டன. இரு வடிமுனை குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டன. 5 மாதர் சங்கங்கள், ஒரு சிறுவர் சங்கம், ஒரு விவசாய இளைஞர் சங்கம், ஒரு முதியோர் பள்ளி ஆகியவை 1956, மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டன. பவானிசாகர், கல்லாறு, கூடலூர், உதகை, மேட்டூர் அணைக்கட்டு ஆகிய இடங்களுக்கு, 33 கிராமத் தலைவர்கள் விஜயம் செய்து, சமுதாய அபிவிருத்தி வேலைகளை நேரில் கண்டறிந்தனர்.

கரூர் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, மே மாதத்தில் 110 டன் கம்போஸ்ட் உரம் விநியோகிக்கப்பட்டதுடன் 49 பவுண்டு P. 216 F. பருத்தி விதை, 40 பவுண்டு C.O. 12 சோள விதை, 20 பவுண்டு C.O. 2 கம்பு விதை, 40 பவுண்டு C.O. 2 ராகி விதை, 100 பவுண்டு M.C. VI பருத்தி விதை ஆகியவையும் விநியோகிக்கப்பட்டன. இதுவரை 1,036 தென்னங்கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன. 200 கால்நடைகளுக்கு சப்பை நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. 106 நோயுற்ற பிராணிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது. சின்னமநாயக்கனூர்-ராஜபுரம் ரஸ்தாமீது கப்பி போடப்பட்டது. அதே ரஸ்தாவிலுள்ள நடைபாதை பாலங்களில்,

குழாய்கள் பதிப்பிக்கும் வேலை பூர்த்தியாகியது. புதிய கிணறு வேலைகள் இரண்டு பூர்த்தி செய்யப்பட்டன. நான்கு கிணறுகள் புதுப்பிக்கப்பட்டன. நல்லிபாளையத்தில், குளிய லறை கட்டி முடிக்கப்பட்டது. தென்னிலை, நடுபாளையம் முதலிய ஊர்களிலுள்ள தாய், சேய் நல விடுதிகளில் 19 பிரசவ கேசுகள் பார்க்கப்பட்டதுடன், கர்ப்பிணிகளும் தாய் மார்களும் வைத்திய பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இந்தியாவிலுள்ள கோழி, வாத்து இனங்கள்

இந்தியாவில் சுமார் 675·25 லட்சம் கோழிகளும், 63·48 லட்சம் வாத்துக்களும் இருக்கின்றன. கோழி வகையரு இனங்களையெல்லாம் ஒன்றாக எடுத்துக்கொண்டோமானால், நம் நாட்டிலுள்ள அவைகளின் எண்ணிக்கை ஐரோப்பா விலுள்ளவைகளின் மொத்த எண்ணிக்கையில் 8·8 சத விகிதமும், வட-தென் அமெரிக்காக் கண்டங்களிலுள்ள வைகளின் எண்ணிக்கையில் 9·4 சதவிகிதமும், ஆப்பிரிக் காவிலுள்ளவைகளின் எண்ணிக்கையில் 40·3 சதவிகிதமும் ஒஷியானாவில் உள்ளதைப்போல் மூன்று மடங்குக்கு அதிக மாகும்.

இந்தியாவில் கோழி வகையரு உற்பத்தியாகும் பிரதான பிரதேசங்கள் :—சென்னை (25·2 சதவிகிதம்), மேற்கு வங்காளம் (12·6 சதவிகிதம்), பீஹார் (11·2 சதவிகிதம்), அஸ்ஸாம் (8·9 சதவிகிதம்), பம்பாய் (8·5 சதவிகிதம்), மத்தியப் பிரதேசம் (6·0 சதவிகிதம்).

எனினும், இந்தியாவில் வருஷத்துக்கு நபர் விகித கோழி மாமிச உபயோகம் மிகக் குறைவாக 0·29 பவுன் டாக இருக்கிறது. இது அமெரிக்காவில் 29·32 பவுண் டாகவும், கானடாவில் 20·94 பவுண்டாகவும், பிரான்சில் 13·23 பவுண்டாகவும் இருக்கிறது. எல்லாவித நவீன கோழி இனங்களும் தோன்றுவதற்குக் காரணமாயுள்ள காட்டுக் கோழி இனங்களின் ஆதி தாயகம் இந்தியாவாகவே இருந்தபோதிலும், இவைகளில் பெரும்பான்மையானவை இங்கு பூர்வ காலச் சூழ்நிலைகளிலேயே கூண்டில் வைக் கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. கோழி வளர்ப்பது, அவைகளுக்கு உணவூட்டுவது, பண்ணையை நிர்வகிப்பது ஆகிய காரியங்களை நவீன முறையில் அபிவிருத்தி செய் வதற்கான முயற்சிகளில் இன்னும் கவனம் செலுத்தப் படவில்லை. ஏராளமான கோழிகள் மூலம் கிடைக்கிற உப பொருள்கள் எந்த விதமான லாபகரமான முறை யிலும் பயன்படுத்தப்படவில்லை ; அநேகமாய் எல்லாம் வீணாகப்போகின்றன.

கிராம மக்களுக்கு, கோழிகளுக்குக் கூண்டு கட்டுவது அவைகளுக்கு உணவு அளிப்பது, நோய்க் கட்டுப்பாடு ஆகிய விஷயங்களில் தொழில் நுட்ப ரீதியான ஆலோசனை கூறுவது, உயர்ந்த ஜாதிக் கோழிகளையும் சேவல்களையும் அவர்களுக்கு சப்ளை செய்வது, கோழி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவது ஆகிய நடவடிக்கைகள் மூலம், கிராம மக்களுக்கு உற்சாகத்தை ஊட்டி இத் தொழிலை ஒரு சிறந்த குடிசைத் தொழிலாக கிராமங்களில் நடத்தி வருவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பெரம்பலூர் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956' மே மாதத்தில் சுமார் 62 ரூபாய் பெறுமான கதர்துணி விற்கப்பட்டதுடன், 108 சர்க்காக்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன. கிராம விதைப் பண்ணைக்காக ADT 3 ரக நெல் விதை 320 பவுண்டு விநியோகிக்கப்பட்டது. 269 நோயுற்ற கால்நடைப் பிராணி களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பூலாம்பாடியில் ஒரு இளைஞர் மன்றமும் அனுக்கூர் குடிகாடு கிராமத்தில் மக்கள் மனமகிழ் மன்றம் ஒன்றும் அரும்பாவூரில் காந்திஜி மாணவர் மன்றமும் ஆரம்பிக்கப்பட்டன. மேலும், 4 சமூகக்கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்டன. போஷாக் குக் குறைவாய் வியாதி பீடிக்கப்பட்ட 36 குழந்தைகளுக்கு வைடமின் மாத்திரைகள் விநியோகிக்கப்பட்டன. தாய், சேய், நலனுக்காக மொத்தம் 140 பேர்களை, பிரசவ மருத் துவ உதவியாளர்கள், வைத்திய பரிசோதனை செய்தார் கள். மலையாளபட்டியில் பலநோக்கு கூட்டுறவு சங்கம் ஒன்றும் நெற்குணத்தில் கிராம வீடுகட்டும் கூட்டுறவு சங்கம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டன. கைகளத்தூரிலும் மேட்டூர் சேரியிலும் ஹரிஜன தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

வள்ளியானை வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956, மே மாதத்தில், 70 டன் கம்போஸ்ட் உரம் உற்பத்தி செய்யப்பட்டது. 35 பவுண்டு பொறுக்கு விதைகள் விநியோகிக்கப்பட்டன. 12 எக்கர் நிலத்தில், இரும்புக் கலப்பைக் கொண்டு உழுவது எப்படி என்பது நிதரிசனமாகச் செய்து காண்பிக்கப்பட்டது. 139 மரங்கள் நடப்பட்டன. இரண்டு தேனீக்கூண்டுகள் பாதி விலைக்கு, தேனீ வளர்ப்போருக்கு வழங்கப்பட்டன. 198 கால் நடைப் பிராணிகளுக்கு நோய்த்தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆறு பழைய கிணறுகள் புதுப்பிக்கப் பட்டன. குரும்பாபட்டியிலும், லிங்கமநாயக்கன்பட்டி யிலும் மாதர் சங்கங்கள் அமைக்கப்பட்டன. எசநத்தத் திலும் பரபட்டியிலும் இரு நடைபாதை பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. குரும்பாபட்டியில் ஹரிஜன தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

கடம்பத்தூர் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, ஜூன் 5-ந் தேதியன்று இறையமங்கலத்தில் ஆரோக்கிய தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இக்கிராமத்தில், 1956, மே 16-ந் தேதி முதல் ஜூன் 6-ந் தேதி வரை சாரணர் முகாம் நடை பெற்றது. அப்போது சாரணர்கள், பாதை அமைப்பு வேலையில் ஈடுபட்டார்கள்.

மண்டகளத்தூர் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, மேமீ' 24-ந் தேதியன்று வட்டார அபிவிருத்தி கமிட்டி கூட்டம், வட ஆற்காடு கலெக்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

(ஜூன் மாத தொடர்ச்சி)

காட்சி 12.

இடம்—நல்லிடைக்குறிச்சி மோகனூத்தூருக்கு இடையில் ஓர் குடிசை.

காலம்—இரவு மணி 10.

நடிகர்கள்—சேகர், மூர்த்தி, மொட்டை, சட்டை, கந்தன், ஹேமா, சச்சுதானந்தம் பிள்ளை, ராமு.

பயங்கரமான காரிருள். அரவமடங்க அமைதியில் ஆழ்ந்து கிடக்கிறது உலகம். சேகரும் மூர்த்தியும் பாழடைந்த குடிசைக்கருகில் நின்றுகொண்டிருக்கிறார்கள்.

சேகர்—மூர்த்தி! மணி 10 ஆகிறது, இன்னும் வண்டி வரக் காணுமே.

மூர்த்தி—மீட்டிங் முடிந்துதானே வரவேண்டும். உனக்காக முன்கூட்டியே வந்திடுமோ ?

சேகர்—கிராமத்து மீட்டிங்! எவ்வளவு நேரம் நடக்கப் போவுது ?

மூர்த்தி—மீட்டிங் நடந்த பிறகு என்னென்ன வேலைகள் இருக்குதோ!? டாக்டரம்மா அல்லவா!? நாமென்னத்தைக் கண்டோம்? சேகர்! உன்னை மணக்க ஹேமா சம்மதிக்க வேண்டும், இல்லையேல் அவளை விடக்கூடாது இன்று. ஞாபகமிருக்கட்டும்.

சேகர்—இன்றைய நிகழ்ச்சியின் அடிப்படையே அது தானே! போயும் போயும் அதையா மறப்பேன்.

(ஜல்! ஜல்! என்ற சப்தம் கேட்கிறது.)

சேகர்—மூர்த்தி! அதைக் கேள்.

(ஜல்! ஜல்! ஜல்! என்ற சப்தம் கேட்கிறது.)

சேகர்—சலங்கை சத்தந்தானே அது.

மூர்த்தி—ஆமாம்! சலங்கை சத்தந்தான்! நம்முடைய வண்டிதான்.

சேகர்—Yes. வண்டி லைட்டு கூட தெரியுது பார்! சரி கூப்பிடு அவர்களை (மூர்த்தி கையைத்தட்டுகிறான். முகமூடி அணிந்த இருவர் வருகிறார்கள்.)

மூர்த்தி—மொட்டை! வண்டி வருகிறது. அதோ பார் லைட்டுகூடத் தெரியுது.

சேகர்—நாங்க இங்கேயே இருப்போம். நீங்க ரெண்டு பேரும் போய் வண்டியை மறைச்சு அவுங்க ரெண்டு பேரையும் கடத்திக்கிட்டு வந்திடுங்க.

மூர்த்தி—என்ன மொட்டை! நான் சொல்லியிருக்கிறதெல்லாம் ஞாபகம் இருக்குதிலே ?

மொட்டை—ஞாபகம் இல்லாமே என்னுங்க.

சேகர்—எய்! சண்டை நடக்கும்போது என்னை அடிச்சுப் போட்டுடாதிங்க.

கட்டை—அதெல்லாம் எங்களுக்குத் தெரியாதுங்களா ? (சேகரும் மூர்த்தியும் ஒளிந்து கொள்கிறார்கள். மொட்டையும் கட்டையும் மெதுவாகப் போகிறார்கள். அவர்களுடைய உருவங்கள் மறைந்து விட்டன. அடுத்த வினாடி தடார் என்கிற சப்தம் கேட்கிறது. திருடன் திருடன் என்று கத்திக் கொண்டு ஓடிவருகிறான் கந்தன். மொட்டை அவனைப் பிடித்துக்கொள்கிறான்,

மொட்டை—எய்! சத்தம் எதாவது போட்டே. மென்னையைக் திருகிடுவேன்.

கந்தன்—ஐயா! உங்களைக் கும்பிடுகிறேன்! என்னை அடிச்சாதிங்கய்யா! விட்டுடுங்கையா!

(அதற்குள்ளாக ஹேமாவும் அங்கு வந்துவிடுகிறாள். அவளைத் தொடர்ந்து வந்த கட்டை மிரட்டுகிறான்.)

மொட்டை—......ம்......கழட்டுச் சங்கிலியை!

ஹேமா—யாருக்கும் நான் தீங்கு செய்யவில்லையே! எனப்பா! எதற்காக என்னிடம் கொள்ளையடிக்க முனைகின்றாய் ?

மொட்டை—காரணமா கேட்கின்றாய்! ? காரணம்! ? ....ம் கழட்டப்போறியா இல்லையா ?

ஹேமா—உனக்கு சங்கிலிதானே வேண்டும் ? அதற்காக இரவில் இப்படியா வழிப்பறி செய்ய வேண்டும் ? என் வீட்டிற்கு வந்து கேட்டாலே கொடுத்திடுவேனே !

(ஹேமா சங்கிலியைக் கழட்டுகிறாள். கந்தன் கத்துகிறான்.)

கந்தன்—ஐயோ ! இங்கே யாருமே இல்லையா ? ஐயோ !

(மொட்டை கந்தன் தலையில் அடிக்கிறான். கந்தன் மௌனியாகிறான். ஹேமா சங்கிலியைக் கொடுக்கப் போகிறாள். அப்போது சேகர் வருகிறான்.)

சேகர்—ஹேமா ! கொடுக்காதே சங்கிலியை ! யாரடாது அயோக்கியன்கள் ! அர்த்த ராத்திரியிலே அதுவும் பெண்களிடத்திலே சாமர்த்தியத்தைக் காட்டும் பயில் வான்கள் ! ?

(மூர்த்தியும் வந்துவிடுகிறான் ! அடியாட்களுக்கும் சேகர், மூர்த்தி முதலியவர்களுக்கும் மல்யுத்தம் நடக்கிறது. இறுதியில் அடியாட்கள் இருவரும் ஓடிவிடுகிறார்கள்.)

(சேகர் மூர்த்தி இருவரையும் பார்த்து.)

கந்தன்—நீங்க ரெண்டு பேரும் நல்லா இருக்கணும். ஆண்ட வன் உங்களை காப்பாத்தனும். சமயத்திலே வந்து உதவி செய்தீங்க.

ஹேமா—இல்லாவிட்டால் உயிரா போயிருக்கும் ?

சேகர்—மானம் மரியாதை யெல்லாம் போனபிறகு உயிர் இருந்து என்ன பிரயோஜனம் ?

மூர்த்தி—பெருநிலக்கிழார் சச்சுதானந்தம் பிள்ளையி னுடைய ஏகபுத்திரி பெரிய டாக்டர், தேச சேவகி, வழிப் பறி செய்யப்பட்டார் என்று நாளைய பேப்பர்லே வந்துட்டா அப்புறம் என்ன மதிப்பு இருக்கும் ?

ஹேமா—உங்கள் உதவிக்கு நன்றி ! கந்தா ! நீ போய் வண்டியை ஓட்டிக்கொண்டுவா.

சேகர்—வண்டியா ? அதுதான் அச்சு வளைஞ்சு கிடக்குதே !

மூர்த்தி—ஊர் ரொம்ப கெட்டுக் கிடக்குது, நீங்க தனிமை யிலே இதுபோல் வெளியே வந்து போவது கொஞ்சங்கூட நல்லதல்ல.

சேகர்—அதுக்காகத்தான் அப்போபுடிச்சு நானும் சொல் லிக்கிட்டு வர்றேன். ஒரு துணையை (மார்பை தட்டிக் கொண்டு) ஏற்படுத்திக்கொள் ; ஏற்படுத்திக்கொள் என்று. ஆனா ஹேமா நீ கேக்கவே மாட்டேங்கிறே.

மூர்த்தி—டாக்டர் இனியும் அப்படியிருக்க மாட்டார்கள் சேகர் ! இந்த நிகழ்ச்சி அவர்களுடைய மனதை நிச்ச யம் மாற்றிவிடும் !

ஹேமா—உங்களுடைய யோசனைகளையோ அறிவுரைகளையோ நான் கேட்கவில்லையே !

மூர்த்தி—நீங்க வெறுத்துப் பேசலாம், ஆனால் தமக்கை மகள் என்ற முறையிலே சேகர் சும்மா எப்படியிருக்க முடியும் ?

ஹேமா—மூர்த்தி ! தயவு செய்து நெருப்பிலே நெய்யை ஊற்றாதீர்கள். அவிந்து கிடக்கும் என் ஆத்திரத்தைக் குத்திக் கிளப்பாதீர்கள். இது எங்கள் குடும்ப விஷயம்— தாங்கள் தலையிடுவது நல்லதல்ல.

சேகர்—மூர்த்தி இல்லாவிடில் இன்று இந்த ஆபத்தி லிருந்து நீ தப்பியிருக்க முடியாது ஹேமா ! மூர்த்தி செய்த இந்த உதவிக்கு நீ ஸ்பெஷலாக நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்காய்.

ஹேமா—மூர்த்தி செய்த காரியத்துக்கு உதவி என்று பெயரா ? திருட்டுத்தனத்தை தீரமென்று சொன்னால், வஞ்சகச் செயலை வாஞ்சையென்று கூறினால், பசப்பு வார்த்தையை பாசமென்று பகர்ந்தால், உங்கள் செயலை யும் உதவி என்று சொல்லலாம் !

சேகர்—தொல்லை விளைவித்து கொள்ளையிட வந்தவனை தடுத்தது எங்களது குற்றந்தான் ! வெரட்டியது அநீதி தான். இரக்கம் காட்டு வோரை இழிந்தவர் என்று தானே உலகம் கூறுகின்றது. நீ மட்டும் அதற்கு விதி விலக்கா ?

ஹேமா—கொள்ளையிட வந்தவன் கோடிபங்கு நல்லவன் தான் !

மூர்த்தி—அந்த அயோக்கியர்களைவிட நாங்கள் மோசமா ?

ஹேமா—ஆம் ! அதில் சந்தேகமென்ன ? அவர்கள் கேவலம் பொன்னையும் பொருளையும் வேண்டினர். ஆனால் இப்போது நீங்கள் கேட்பது......! சேச்சே ! சொல்லக் கூட நாக்கு கூசுகின்றதே !

சேகர்—நாக்குக் கூசும் ! ஏன் கூசாது ? "மாமனை மணந்து கொள்ள முடியாது, மனதிற் கிசைந்த வேறு யாரையா கிலும் மணந்து கொள்ளுகிறேன்" என்று சொன்னாயே எவ்வளவு மமதை இருக்கவேண்டும் உனக்கு ! அப்போ மட்டும் நாக்கு கூசவில்லையோ ?

ஹேமா—பகலவனைக் கண்டுதான் பங்கஜம் இதழ் விரிக் கும். சகலரும் கற்றுணர்ந்த சற்குண சீலருக்கு இதனை புகலவும் வேண்டுமோ ! மாமா மரியாதை தருகிறேன். தாயின் தம்பி என்ற முறையில். ஆனால் வீணாக என்னோடு விளையாடாதீர்கள். விபரீதமாய் போய்விடும். வேதனை அடைய நேரிடும்.

மூர்த்தி—விபரீத நிகழ்ச்சிகளும் வேதனைச் செயல்களும் எங்களுக்கு விருந்துபசாரம் ! கோலாகல வரவேற்பு.

சேகர்—அன்று என்ன சொன்னாய் உன் தந்தையிடம்.

கந்தன்—சொன்னாங்க சேகருக்கு மாலைபோடுரேன்னு ? கழுத்துக்கு பிரஷ்போட்டு துடைச்சு வச்சுகிட்டிருக்காங்க.

மூர்த்தி—மடையா ! சும்மா இருக்க மாட்டே.

சேகர்—சேகருக்கும் எனக்கும் திருமணம் செய்வதாய் இருந்தால் தவம் புரிந்து பெற்றெடுத்த இந்த ஹேமா வின் சவத்தின் மீது நின்று கொண்டு தான் முகூர்த் தோலை எழுதவேண்டும் என்று சொன்னாயே ! உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்கவேண்டும். இதோ ! இப்போதே உனக்கு நான் தாலி கட்டினால் நீ என்ன செய்வாய்.

கந்தன்.—ஐயோ! பாவிகளா !? உங்களை அடக்குவார் யாரு மில்லையா? (அடே! யாரடா அது? மடையன்கள்? எவனடா ஹேமாவிடம் வம்பு வளர்ப்பது? ராமு! பிடி அவர்களை என்று கூறிக்கொண்டு சச்சுதானந்தம் பிடிக்க வருகிறார். அவரோடு கூட ராமு அரிக்கேன் லைட்டை தூக்கிக்கொண்டு குண்டாந்தடி யொன்றை எடுத்துக் கொண்டு வருகிறான். சச்சுதானந்தம் பிள்ளையை கண்டதும் மூர்த்தி நழுவி விடுகிறான். சேகரை மட்டும் கவனிக்கிறார் சச்சுதாநந்தம் பிள்ளை.)

சச்சு.—யாரது? சேகரா? என்னப்பா இது?

சேகர்.—ஒண்ணுமில்லே அத்தான் யாரோ ரெண்டு காலிப் பயல்கள் நம்பவண்டியை மறைச்சு ஹேமாவுடைய சங்கிலியை அபகரிக்கப்பார்த்தாங்க.

கந்தன்.—நம்ப! சேகர் அய்யாத்தான் அவன்களோடவே வந்து காப்பாத்திணுங்க.

சேகர்.—ஆமா அத்தான் நான் வராட்டிப்போனு ரொம்ப எக்கச் சக்கமா போயிருக்கும்.

ஹேமா.—ஆமாம்பா! பால் வார்த்து வளர்த்தவனையே கடித்திருக்கும் பாம்பு—பரிவு காட்டி வளர்த்த பாகனையே கொன்றிருக்கும் யானை.

சச்சு.—சரி ஆபத்து ஒண்ணும்......

ஹேமா.—நேர்ந்து விடவில்லை அவ்வளவு தான்.

சச்சு.—கடிகாரத்தைப் பார்த்தேன் மணி 11-க்கு மேலே ஆகியிருந்தது. வண்டியப்பார்த்தா வரக்காணோம். பிறகு எனக்கு சந்தேகம் உண்டாயிட்டுது. ஆஸ்பத்திரியில் படுத்திருந்த ராமுவையும் கூப்பிட்டுக்கிட்டு வந்தேன்.

கந்தன்.—நீங்கவந்தது ரொம்ப நல்லதா போச்சு எசமான்.

ஹேமா.—அப்பா! கிளம்புங்கள். வீட்டிற்குப் போய் எல்லாவற்றையும் பேசிக்கொள்வோம்.

திரை விழுகிறது.

காட்சி 13.

இடம்.—சாந்தா நர்ஸிங் ஹோம்.

காலம்.—காலை நேரம்.

பாத்திரங்கள்.—ஹேமா, ராமு, மோகன்.

மேஜைக்கருகில் உட்கார்ந்துகொண்டு ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறாள் ஹேமா. மிக்சர் ஒன்றை தயார் செய்கிறான் ராமு.

ஹேமா.—கம்பௌண்டர்.

ராமு.—டாக்டர்.

ஹேமா.—சம்பந்த முதலியார் வீட்டிலிருந்து ஆள் வந்தானு?

ராமு.—வல்லீங்க டாக்டர்.

ஹேமா.—மணி எழாகிறதே! இன்னமா வரவில்லை? (ராமு வெளியில் வந்து சுற்று முற்றும் பார்க்கிறான் தனக்குள்ளே சொல்லிக் கொள்ளுகிறான்.)

ராமு.—அடடே! யாரு அவரு? ஆமாம் அவரேதான்! (வேகமாக ஹேமாவிடம் ஒடுகிறான் ராமு.)

ராமு.—டாக்டர்! ஹைவேஸ் ஜூனியர் இஞ்சினீயர் மோகன் வருகிறார்.

ஹேமா.—என்ன!? மோகனு!? இங்கேயா வருகிறார்? இருக்காது ராமு!? வேறு யாரையோ பார்த்து விட்டுச் சொல்கின்றாய்.

(ஹேமா நாற்காலியை விட்டு எழுந்து விடுகிறாள்.)

ராமு.—வேறு யாருமில்லை. மோகனேதான் டாக்டர்! இன்னும் சிறிது நேரத்தில் இங்கு வந்து விடுவார் பாருங்கள்.

ஹேமா.—மாதருக்கு அணி, பணிவும் இன்சொல்லும்: படித்திருக்கிறேன் பல நான். ஆனால் ஆத்திர மிகுதியால் அன்று மோகன் முன்னிலையில் கண்ணியமற்ற முறையில் சொல்லியதை இன்று நினைத்தால் கூட நெஞ்சு நெகிழத்தான் செய்கிறது. ராமு! அன்று நான் கொட்டிய சொற்கள் ஹைவேஸில் வேலை செய்கிற கேங் கூலிக்குக் கூட வேம்பாக இருக்கும். அப்படியிருக்க ஒரு ஜூனியர் இஞ்சினியர் என்ன நினைத்துக் கொள்வார்!?

ராமு.—மோகன் தங்கமான பேர்வழி டாக்டர்! அவரோடு நீங்கள் பேசிப்பார்க்கவில்லை! ஐந்து நிமிஷம் பேசினுக் கூட போதுங்க, அவருடைய குணம், பெருமை, தன்னலங் கருதா சேவை எல்லாந் தெரிந்துவிடும்.

ஹேமா.—அன்று நடந்த நிகழ்ச்சிக்கு வருந்தி மனம் புண்ணுகி மன்னிப்புக் கோரி மோகனுக்குக் கடிதங்கூட எழுதினேன். ஆனுல் இன்று வரை பதிலில்லை.

ராமு.—அதற்காகத்தான் நேரிலேயே வருகிறார்போலிருக்கிறது. (மோகன் நுழைகிறார்.) இதோ சார்கூட வந்துட்டாங்களே!

ஹேமா எதிர் சென்று "வணக்கம், வணக்கம்" வாணும் என்று கரங்கூப்பி அழைக்கிறாள்.

ராமுவும் வணக்கம் சார்! வணக்கம்! என்று கரங் கூப்பி அழைக்கிறான்.

"வணக்கம்! எல்லோருக்கும் வணக்கம்" என்று மலர்ந்த முகத்தோடு நுழைகிறார் மோகன்.

ஹேமா.—இப்படிஉட்காருங்கள் (நாற்காலியைசுட்டிக்காட்டி) மோகன் உட்காருகிறார். ஹேமா நின்று கொண்டிருக்கிறாள்.

ஹேமா.—"ஏன் நிற்கிறீர்கள் நீங்களும் உட்காருங்கள்."

(ராமு ஒரு நாற்காலியை கொண்டுவந்து போடுகிறான்.) ஹேமா அதில் உட்காருகிறாள். ராமு நாற்காலியை போடும்போது மோகன் ராமுவை கவனிக்கிறார்.)

மோகன்.—ராமுவைப்பார்த்து நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்?

ராமு.—ஆமாம்.

ஹேமா.—கொஞ்ச நாளாக இங்கே கம்பௌண்டர் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

மோகன்.—அப்படியா ! ரொம்ப மகிழ்ச்சி !!

(அதற்குள்ளாக ராமு வெளியில் சென்று விடுகிறான்.)

மோகன்.—உங்களுடைய கடிதம் கிடைத்தது.

ஹேமா.—அறிவிழந்தேன். ஆத்திரங்கொண்டேன். நெறி தவறி கூறிவிட்டேன். நெஞ்சு பொறுக்கவில்லை. அதற்காகத்தான் அன்றே கடிதம் எழுதினேன்.

மோகன்.—இதை நீங்கள் சொல்லவா வேண்டும் ! உங்கள் கடிதத்திலுள்ள ஒவ்வொரு சொல்லுந்தான் சொல்கின்றனவே. ஆகையால்தான், நானே வந்து விட்டேன். ஆனால் இந்த சின்ன விஷயத்தில் சிந்தையை செலுத்தி இவ்வளவு தூரம் நொந்து கொண்டிருக்கவேண்டியதில்லை தாங்கள்.

ஹேமா.—அந்த சம்பவத்தை நீங்கள் அடியோடு மறந்து விடத்தான் வேண்டும்.

மோகன்.—அதை எப்படி மறக்க முடியும் டாக்டர் !? அது தானே உங்களைத் தெரிந்து கொள்ளத் தூண்டியது.

ராமு அதற்குள்ளாக மூன்று கிரஷ்களை வாங்கிக் கொண்டு வருகிறான். இரண்டை உடைத்து இரண்டு கிளாஸில் போட்டுக் கொடுக்கிறான்.

மோகன்.—இதெல்லாம் எதற்கு ?

ஹேமா.—சும்மா சாப்பிடுங்க.

(ஹேமா மோகன் இருவரும் சாப்பிடுகிறார்கள்.)

மோகன்.—அப்பா ஊரில்தானே !

ஹேமா.—இல்லை மாயூரத்திற்குச் சென்றிருக்கிறார். அன்று அப்பாவும் ஏதேதோ கடுமையாகப் பேசிட்டார்னு கேள்விப்பட்டேன். அதையும் நீங்க மறந்துவிடவேண்டும்.

மோகன்.—எதை மறந்தாலும் மறக்காவிட்டாலும் உங்கள் அப்பாவிடம் மோகனத்தூர் புதிய பாதைக்கு வேண்டிய நிலத்தை இனமாக வாங்கவேண்டும் என்பதை மட்டும் மறக்கமாட்டேன்.

ஹேமா.—அதைப்பற்றி உங்களுக்கு கவலையே வேண்டாம். அது என் பொறுப்பு. எப்படியாவது அப்பாவை சம்மதிக்கச் செய்துவிடுகிறேன்.

மோகன்.—அன்றைய சந்திப்பு வரையில் உங்களைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. தெரிந்திருந்தால் நிலத்தை உங்களிடமிருந்தே சுலபமாக வாங்கியிருப்பேன்.

ராமு.—இப்போதுதான் என்னுங்கிறீங்க ? டாக்டர் அம்மா மூலியமாகவே நம்ம சாலைக்கு வேண்டிய நிலமெல்லாம் கிடைக்கத்தான் போவுது.

மோகன்.—அது மட்டுமென்ன ? அருகில் இருந்துகொண்டு "புதிய பாதை" அமைக்கப் போவதும் டாக்டர்தான்.

ஹேமா.—உங்கள் விருப்பப்படியே அந்தப் பொறுப்பையும் நானே ஏற்றுக்கொள்ளுகிறேன்.

மோகன்.—"தன்னலங்கரு தாசேவையே நாம் உலகில் சேர்த்து வைக்கவேண்டிய பெரும் பொருள்" என்ற உங்களுடைய தாரக மந்தரத்திலே உங்களை நான் நன்கு புரிந்து கொண்டுவிட்டேன் டாக்டர்.

(ஹேமா பதில் சொல்லவில்லை. ஆனால் அவளுடைய அதரங்களிலே நெளிந்தோடிய புன்னகை, அதற்குப்பதில் சொல்லிற்று.)

மோகன்.—நேரமாகிறது நான் போய்வருகிறேன்.

ஹேமா.—என்ன ! அவ்வளவு சீக்கிரமாகவா ! ? சாப்பிட்டு விட்டுச் செல்லலாமே.

மோகன்.—பாதகமில்லை. இந்த புதிய பாதை சம்பந்தமாக Detailed estimate போடவேண்டியிருக்கிறது. அதற்காக லெவல்ஸ் எடுத்துக்கொண்டிருக்கிறார் எங்கள் R.I. அங்கு நான் போகவேண்டும். இன்னொரு சமயம் வந்தால் சாப்பிடுகிறேன்.

ஹேமா.—மத்யானம் வண்டியை அனுப்புகிறேன். அதில் வந்து சாப்பிட்டுவிட்டு போய் விடலாமே.

ராமு.—ஆமாம் சார். அப்படியே செய்துடலாம். அந்தப் பக்கத்தில் ஹோட்டல்கூட கிடையாது.

மோகன்.—இல்லை. சிரமம் வேண்டாம். எல்லாவற்றிற்கும் முன்பே ஏற்பாடாகி விட்டது.

ஹேமா.—ராமு ! கந்தனிடம் சொல்லி வண்டியை பூட்டிகிட்டு வரச்சொல்லு.

மோகன்.—இல்லை. வண்டி வேண்டாம். சைக்கிள் இருக்கிறது. அதுவே போதும். நான் போய் வருகிறேன்.

ஹேமா.—இந்தப்பக்கம் வரும்போதெல்லாம் இங்கேவர மறந்துவிடமாட்டீர்களே !?

மோகன்.—நல்லா இருக்குது ! வணக்கம் !

ஹேமா.—வணக்கம் !

மோகன் திரும்பி வருகிறார். ராமு பின்தொடர்கிறான்.

(திரை விழுகிறது.)

(தொடரும்)

கலசபாக்கம் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956, மே மாதத்தில், மன்சூராபாதில் ஒரு புதிய பள்ளிக்கூடம் திறக்கப்பட்டது. இப் பள்ளிக்கூடக் கட்டிடத்துக்கான செலவில் பாதியை உள்ளூர் மக்கள் ஏற்றுள்ளனர். கிராம கூட்டுறவு நாணய சங்கங்கள் மூலம், 14,475 ரூபாய் கடனுதவி, விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.

காஞ்சிபுரத்தில் பெரு விழா

இவ்வருஷ மே மாதம், அகில இந்தியாவின் பார்வையை, சென்னை ராஜ்யத்தின் மீது திருப்பியது என்று கூறலாம். சென்னை ராஜ்யத்தைச் சார்ந்த காஞ்சிபுரத்தில், அகில இந்திய 'சர்வோதய சம்மேளனம்' நடைபெற்றது. 'மகரிஷி விநோபாஜி' அவர்கள், சென்னை ராஜ்யத்தில் பூதான இயக்கத்தை வளர்க்க, பாத யாத்திரை மேற்கொண்டார். மே மாதம் 12-ம் டி திருவாலங்காடு கிராமத்தில் தங்கியிருந்து, மறு நாள் விடியற்காலை சென்னை ராஜ்யத்தின் எல்லையிலுள்ள 'பட்டரைப் பெரும்பூதூர்' என்ற கிராமத்திற்கு விஜயம் செய்தார். தமிழ் நாட்டின் சார்பாக, முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்கள், பூதான முனிவருக்கு, குதூகலமாக வரவேற்பு அளித்தார். தமிழ் நாட்டின் பண்பாட்டையொட்டி, மங்கள கீதம் முழங்க, மாதர்கள் பூர்ண கும்பம் எடுத்து, பக்தி பரவசத்தோடு, காந்தி அடிகளின் சீடரை, மக்களெல்லோரும் மனமகிழ்ச்சியோடு வரவேற்றனர். குடத்தலையாற்றின் கரையில் அமைந்த இலுப்பைத் தோப்பு மிகச் சிறந்த வகையில் அலங்கரிக்கப்பட்டு, முனிவரின் பிரார்த்தனைக் கூட்டத்திற்கான, இயற்கை அமைதி குடிகொண்ட சூழ்நிலையை, உருவாக்கித் தந்தது. தமிழ் நாட்டின் பல்வேறு ஜில்லாக்களிலிருந்தும் பூதான ஊழியர்கள், கிராம சேவையாளர்கள், சட்டசபை உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், சமுதாய அபிவிருத்தித்திட்ட ஊழியர்கள் முதலிய அனைவரும், அடிகளாரின் அன்பு இயக்கத்தை அறிந்து போற்றும் நோக்கத்தோடு அங்கே கூடியிருந்தனர். அங்கே வந்திருந்த ஏழைச் சிறுவர் இருவர் கையைப் பிடித்துக்கொண்டு தம்முடைய பாத யாத்திரையைத் தொடர்ந்து நடத்தினர் அடிகளார். சில இடங்களில் அவர் ஓடிய ஓட்டத்தைக்கண்டு எல்லோரும், உற்சாகம் கொண்டனர். ஓட்டமும், நடையுமாக அன்று காலை சுமார் ஒன்பது மணிக்கு 'திருவள்ளூரை' வந்தடைந்தார். அன்று முதல், காஞ்சிபுரம் மாநாட்டிற்கு வந்து சேரும் வரை, ஒவ்வொருநாளும், அதிகாலையில் சராசரி எட்டு மைல்கள் நடப்பதும், தங்கும் கிராமங்களில் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்துவதும், பூதான இயக்கத்தை விளக்கிக் கூறுவதும், அவருடைய அன்றுட சேவையாக இருப்பது தமிழ் நாட்டு கிராம மக்கள் நேரில் கண்ட அனுபவம்.

சமுதாயத்துக்காகத் தியாகம்

பூதானம் என்பது, விநோபாஜியின் கருத்துப்படி, வெறும் நிலத்தைத் தானமாகப் பெறுவதோ, அவ்வாறு கிடைத்த நிலத்தை விநியோகிப்பதோ மட்டுமல்ல. ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்திற்காக ஓரளவுக்குத் தியாகம் செய்யவேண்டுமென்ற கடமையை நினைப்பூட்டவே இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறுகிறார். சம்பத்து தானம், சிரம தானம், கிராம தானம் என்ற பல்வேறு பெயர்களில் வழங்கப்படுபவை, பூதான இயக்கத்தின் பகுதிகளேயாகும். சுருங்கச் சொன்னால், 'சமுதாய நலனை புறக்கணித்து வாழ நினைப்பது, மிகவும் தவறு. அவ்வாறு செய்வது மகா பாவம்' என்பது அவருடைய கொள்கை. தியாக மனப்பான்மையை மக்கள் அன்றுட வாழ்க்கையில், வற்புறுத்துவதற்காகவே, அவர் இந்த மகத்தான வேள்வியில் ஈடுபட்டிருக்கிறார்.

விநோபாஜியின் வேண்டுகோள்

தமிழ் நாட்டின் தலைவாசலில் அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டபோது, அவர் கூறியதாவது :—"நான் மிகுந்த நம்பிக்கையுடன் தமிழ் நாட்டின் மண்ணில் கால் வைக்கிறேன். இந்த ராஜ்யத்தில் தமிழ் மக்கள் பூமிதான இயக்கத்திற்கு, மகத்தான வெற்றி ஏற்படச் செய்வார்கள் என்று உறுதியாக நம்புகிறேன். தமிழ் மக்கள், மற்ற ராஜ்யங்களுக்கு, சிறந்த உதாரணமாக விளங்கவேண்டும் என்பது என்னுடைய அவா."

அடிகளாரின் நம்பிக்கை, தமிழ் மக்களின் உறுதியை அதிகப்படுத்தியுள்ளது. பூதானப் பத்திரங்களும், கிராம தானமும் ஏராளமாக சமர்ப்பிக்கப்படுகின்றன. அடிகளார் செல்லும் இடந்தோறும் மக்கள் உற்சாகமும் பக்தியும் கரைபுரண்டோடுகின்றன. வழி நெடுகிலும் தோரண அலங்காரங்கள், நீர்மோர் பானக விநியோகம், கருத்து நிறைந்த பிரார்த்தனைக் கூட்டங்கள் முதலியன நிகழ்ந்த வண்ணமிருக்கின்றன. இந்த இயக்கத்திற்கு எதிர்ப்பே எங்குமில்லை. எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் அடிகளாரின் சீல வாழ்வுக்கும், சாத்வீக நெறிக்கும் மதிப்புக் கொடுத்து, அவருடன் கலந்துபேசி, அறிவு விளக்கம் பெறுகின்றனர். அரசன் முதல் ஆண்டி வரையில் அவர் தோழர்கள். இந்திய யூனியன் ராஷ்டிரபதி ராஜன்பாபு முதல், கிராமங்களில் வாழும் சாதாரண ஏழைச் சிறுவர் வரை, அவருடைய அன்புநெறி பரந்து செல்கின்றது. பகைமைக்கும், சிறுமைக்கும் அவருடைய நெறியில் இடமில்லை. காந்தியடிகள் வற்புறுத்திவந்த சத்தியம், அகிம்சை ஆகிய தத்துவங்களுக்கு இன்றைய நிலையில் கூறப்படும் பொருளாதார விளக்கமே பூதான இயக்கம்.

வட்டார ஊழியர்களிடையே விநோபாஜி

வேப்பம்பட்டு கிராமம் சரித்திரப் பிரசித்தி பெற்றுவிட்டது. அங்கேதான் சமுதாய அபிவிருத்தி திட்டத்தைப்பற்றிய பரிசோதனையை விநோபாஜி நடத்தி, அதன் முடிவையும்

வெளியிட்டார். திருவள்ளூர் அபிவிருத்தி வட்டாரத்தைச் சேர்ந்த ஊழியர்களே, பல கேள்விகள் கேட்டு அவர்கள் செய்யும் வேலை விபரத்தையும், அதற்கு அடிப்படையாக உள்ள தத்துவத்தையும் தட்டிப்பார்த்து ஆசி கூறினார்.

சோஷலிஸ பாணியில் அமைந்த சமுதாயம் உருவாக வேண்டும் என்ற தீர்மானம், சுமார் பதினெட்டு மாதங்களுக்கு முன்பு ஆவடி காங்கிரஸில், நிறைவேறியதல்லவா? அந்த காங்கிரஸ் மாநாட்டுக்கு விநோபாஜி சர்வோதயக் கொள்கையை ஞாபகப்படுத்தி ஒரு விசேஷச்செய்தி அனுப்பியிருந்தது எல்லோருக்கும் நினைவிருக்கும். அதே ஆவடி கிராமத்துக்கு அடிகளார் நேரில் விஜயம் செய்து, பிரார்த்தனைக் கூட்டத்தை சிறப்பாக நடத்தினார். அதற்குப்பின், அம்பத்தூர், பெரம்பூர், சென்னை நகரம் முதலிய இடங்களில் தங்கி, பூதான இயக்கத்துக்கு ஊக்கமளித்தார். விவசாய அமைச்சர் ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் விநோபாஜியைச் சந்தித்து, கிராமநலத் திட்டங்களைக் குறித்து கலந்து பேசினார்.

காஞ்சிபுரத்தில் மகத்தான வரவேற்பு

சென்னையிலிருந்து மவுலிவாக்கம், பழஞ்சூர் வழியாக ஸ்ரீபெரும்புதூர், திருமங்கலம், வாலாஜாபாத், இராஜம்பேட்டை முதலிய ஊர்களில் தங்கி 27-ந்தேதி காலை சுமார் 10½ மணிக்கு காஞ்சியிலுள்ள சர்வோதயபுரத்தை வந்தடைந்தார். இந்தியாவின் பல்வேறு பாகங்களிலிருந்தும் வந்திருந்த சர்வோதய சம்மேளனப் பிரதிநிதிகள் அவருக்கு மகத்தான வரவேற்பளித்தனர்.

ராஷ்டிரபதி ராஜன்பாபு அவர்கள், இந்த சமயத்தில் காஞ்சிபுரத்துக்கு விஜயம் செய்தது, சர்வோதய இயக்கத்தின் வளர்ச்சிக்குச் சிறந்த தூண்டுகோலாக அமைந்தது. அத்துடன், அகில இந்திய ஆதாரக் கல்வி மாநாடும் அங்கே மூன்று நாட்கள் நடைபெற்றதன் மூலம், நிர்மாணத் துறையில் ஈடுபட்டுள்ள எல்லா ஊழியர்களும் ஒன்று சேரும் வாய்ப்பு ஏற்பட்டது. நம் நாட்டின் எல்லா ராஜ்யங்களிலிருந்தும் அதிகாரிகள், அதிகாரப் பற்றற்ற பொதுஜன ஊழியர்கள், சட்டசபை, லோக்சபை அங்கத்தினர்கள் முதலியோரனைவரும் மனங்கலந்து பேசவும், சிறந்த திட்டங்களை உருவாக்கவும் முடிந்தது.

கண்காட்சிக்கு ஆயிரக்கணக்காக மக்கள் விஜயம்

கிராமக் கைத்தொழில்களுக்கும், ஆதாரக் கல்வி வளர்ச்சிக்கும், முக்கியத்துவம் அளிக்கும் முறையில், ஒரு சிறந்த கண் காட்சிச் சாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கவர்ச்சியோடு பயனும் நிறைந்த அந்தக் கண் காட்சியை, இராஜன் பாபுவும், ஆயிரக்கணக்கான மக்களும் கண்டு களித்தனர்.

ஆதாரக் கல்வி மகாநாடு

ஆதாரக் கல்வி மாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவரான, நம் கல்வி அமைச்சர் ஸ்ரீ சி. சுப்ரமணியம் கருத்துச் செறிந்த சொற்பொழிவை நிகழ்த்தினார். ஆதாரக் கல்வியில் அவருக்குள்ள விசேஷ சிரத்தையை அகில இந்தியத் தலைவர்களும் பாராட்டி, வாழ்த்துக் கூறினார். ஆதாரக் கல்வி வளர்ச்சிக்கான அநேக ஆலோசனைகள் அம்மாநாட்டில் வெளியிடப்பட்டன.

முதலமைச்சர் கொடுத்த வாக்குறுதி

விநோபாஜியைத் தமிழ் நாட்டின் தலைவாயிலான திருவள்ளூரில் வரவேற்றபோது, முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ் பின்வருமாறு கூறினார் :—"காந்திஜியைத் தமிழ் நாட்டு மக்கள் பக்தி சிரத்தையுடன் பின்பற்றி வந்திருக்கின்றனர். அன்னாரின் தத்துவங்கள் இங்கு வேரூன்றியிருக்கின்றன. ஆச்சார்ய விநோபாவின் இயக்கத்தில் அரசியல் கிடையாது. வறுமைக்கே இடமில்லாத சர்வோதயத்தை ஏற்படுத்துவது, இதன் இலட்சியம். இந்த சித்தாந்தத்தைப் பரப்பவே அவர் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டிருக்கிறார். ஒவ்வொரு நல்ல காரியத்தையும் தமிழ் நாட்டினர் ஆதரித்து வந்துள்ளனர். அவருடைய ஆசை இங்கு நிறைவேற, தமிழ் நாட்டு மக்கள் முழு மூச்சுடன் பாடுபடுவார்களென்பதே, நான் அவருக்கு கொடுத்த வாக்குறுதி." இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில், தமிழ் நாட்டு மக்கள் முன்னணியில் நிற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

காஞ்சி மாநாடுகளின்போது, அகில இந்திய கிராமக் கைத்தொழில், கதர் போர்டும் அங்கே கூடி, தன் எதிர்காலத் திட்டங்களைக் குறித்து விவாதம் நடத்தியது. அதன் தலைவர் ஸ்ரீ வி. எல். மேத்தாவும் மற்ற அங்கத்தினர்கள் எல்லோரும் விநோபாஜியுடன் கலந்து பேசி, விளக்கம் பெற்றனர். அந்த சந்தர்ப்பத்தில் "சர்வோதயப் பாதையில்" ("Towards Sarvodaya") என்ற பெயரால் ஒரு விசேஷ மலரை சென்னை அரசாங்க செய்தி இலாகா வெளியிட்டனர். கண்ணைக் கவரும் முறையில் அமைந்துள்ள அந்த மலரிலுள்ள விசேஷக் கட்டுரைகளும், படங்களும் எல்லோர் உள்ளங்களையும் கவரும் என்பதில் ஐயமில்லை.

காஞ்சிபுர மாநாடுகள் அகில இந்தியாவுக்கும் நிர்மாணத் துறையில் சரியான வழிகாட்டியுள்ளன. மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவதற்குத் துணைபுரிந்த அனைவரும் பாராட்டிற்கு உரியவராவர். காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் பிரம்ம உற்சவத்தோடு, தேசியத் திருவிழாவும் ஒன்று கலந்தது, பெரிய விசேஷமல்லவா?

— "சாமி"

Printed by the Superintendent, Government Press, Madras, Edited by the Public Relations Officer and published by the Additional Development Commissioner, Government of Madras.